“திருமலை க்ஷேத்ர தர்ஸினி கிரந்தமாலா”

# ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி அவதாரம்

*தெலுங்கு மூலம்*

**சமுத்திரால லட்சுமணய்யா**

*தமிழாக்கம்*

**புல்லூரி உமா**

*வெளியீடு*

**திருமலை திருப்பதி தேவஸ்தானம்**

**திருப்பதி**

**2019**

"Tirumala Kshetra Darsini" series

**SRI VENKATESWARA SWAMY AVATHARAM**

**Telugu Original**
**Dr. Samudrala Lakshmanaiah**

**Tamil Version**
**Dr. P. UMA**

T.T.D. Religious Publications Series No.1178
© All Rights Reserved

*First Edition :* 2019

*Copies :* 500

*Published by*
**SRI ANIL KUMAR SINGHAL,** I.A.S.,
Executive Officer,
Tirumala Tirupati Devasthanams,
Tirupati - 517 507

***D.T.P:***
Publications Division,
T.T.D, Tirupati.

*Printed at :*
Tirumala Tirupati Devasthanams Press,
Tirupati - 517 507

# FOREWORD

**Venkatadri Samam Sthanam Brahmande Nasti Kinchana;**
**Venkatesa Samo Devo Na Bhuto Na Bhavishyati.**

**There never existed a God equal to Him in the past nor will exist in future.**

*Sri Venkateswara* is the presiding deity, self-manifested on *Venkatadri* radiating His benign blessings on millions of devotees visiting Him.

As part of the propagation of the glory of *Kshetram,* series of books have been brought-out by TTD under '*Tirumala Kshetra Darshini*' series.

Professionals with outstanding merit have been entrusted with the job of bringing-out series of books on the Glories of *Lord,* Sports (*Leela*) of the *Lord,* holy *Theerthas,* rituals in daily worship (*Nityarchana*) etc.

Dr. Samudrala Lakshmanaiah has authored a book in Telugu entitled *'Sri Venkateswara Swami Avataram'* duly narrating the course of events that lead to *Lord's* arrival to the earth. This is translated into English with the title *'Sri Venkateswara Swami Avataram'* by Dr. P.Uma a reputed Scholar in Tamil.

This book is handy and contains very valuable information on the *Lord* and provides an insightful reading to all those who desire to know the self-manifest *Lord* on the *Seven* Hills. I earnestly hope that

this will enhance the understanding and knowledge of *Lord* and thus help appreciate the true spirit and meaning of this *Avatara* by the common readers.

In the Service of Lord Venkateswara



**Executive Officer,**
Tirumala Tirupati Devasthanams,
Tirupati.

# முன்னுரை

**வேங்கடாத்ரி ஸமம் ஸ்தாநம் ப்ரஹ்மாண்டே நாஸ்தி கிஞ்சன !**
**வேங்கடேச ஸமோ தேவோ நபூதோ ந பவிஷ்யதி !!**


திருவேங்கடமலைக்கு நிகரான மற்றொரு க்ஷேத்திரம் இந்த பிரம்மாண்டத்திலேயே இல்லை. திருவேங்டவருக்கு நிகரான பெருமாள் இதுவரை இருந்ததில்லை இனி இருக்கப் போவதுமில்லை–என்பது பொருள்.

கலியுக வைகுண்டமாக பிரசித்தி பெற்ற திருமலை மீது அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன் திருவேங்கடவர் அவதரித்து தினமும் பக்தர்களுக்கு தரிசனம் தந்து அவர்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கின்றார். திருவேங்கடவரின் திவ்விய மங்கள விக்கிரஹ மூர்த்தியை ஒரு நொடியாவது தரிசனம் செய்ய கோடானகோடி பக்தர்கள் தினமும் இத் தலத்திற்கு யாத்திரையாக வருகின்றனர்.

கூப்பிட்டக் குரலுக்கு செவி மடுக்கும் கண்கண்ட தெய்வமாய் வேண்டிய வரங்களை தரும் திருவேங்கடவர் எழுந்தருளியுள்ள இத்தலத்தில் ஸ்வாமி திவ்வியமங்கள விக்ரஹம், ஸ்வாமி புஷ்கரணி, புண்ய தீர்த்தங்கள், ஸ்வாமிக்கு மிக விமர்சையாக நடைபெறும் நித்யகைங்கர்யங்கள், நடைபெறும் பிரம்மோற்சவங்கள் முதலான விஷயங்களை பக்தர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்னும் நோக்கில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் ‘திருமலை க்ஷேத்திரதர்ஸினி’ என்னும் பெயரில் நூல்களை சிறந்த பண்டிதர்களைக் கொண்டு வெளியிட முற்பட்டது.

அதில் ஒரு பகுதியாக தற்பொழுது டாக்டர். சமுத்திரால லஷ்மணய்யா அவர்கள் தெலுங்கில் எழுதிய 'ஸ்ரீ வெங்கடேஸ்வரஸ்வாமி அவதாரம்' என்னும் நூலினை தமிழில் டாக்டர். புல்லூரி உமா அவர்கள் மொழி பெயர்த்துள்ளார். பக்தர்கள் இப் புத்தகத்தின் வாயிலாக ஸ்வாமியின் அவதார வைபவத்தை அறிந்து பலன் அடைவார்கள் என நம்புகிறோம்.

என்றும் பெருமாளின் சேவையில்
செயலாட்சித் தலைவர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம்
திருப்பதி



# பொருளடக்கம்

## முதல் அத்தியாயம்

1. தசாவதாரம் 1

2. ஐந்து ஸ்வரூபங்கள் 4

3. அர்ச்சாவதாரத்தின் சிறப்பு 5

4. அருள்மிகு திருவேங்கடநாதரின் அர்ச்சாவதாரம் 6

## இரண்டாம் அத்தியாயம்

5. நாரதமகரிஷியின் கேள்வி 8

6. மும்மூர்த்திகளைச் சோதித்தல் 9

7. வைகுண்டத்தை விட்டு லட்சுமிதேவி வெளியேறுதல் 10

8. வேங்கடாசலம் சென்ற திருமால் 12

9. பசு, கன்றுகளாக உருமாறிய பிரம்மாவும் ருத்திரரும் 14

10. பாலில்லாத பசு 15

11. மாடு மேய்ப்பவன் மாண்டான் 16

12. சோழ அரசன் பெற்ற சாபம் 17

13. புளியமரம் – புற்று 18

14. வராஹ சுவாமியுடன் சந்திப்பு 19

15. வகுளமாலிகை 21

16. ஆகாசராஜன், தொண்டைமான் 22

17. பத்மாவதியின் தோற்றம் 23

18. பத்மாவதி வனத்தில் உலா வருவது 24

19. ஸ்ரீநிவாஸர் வேட்டையாடுவது – பத்மாவதியைக் காண்பது 25

20. பத்மாவதியின் பச்சாத்தாபம் 27

21. வேதவதியின் வரலாறு 28

22. வகுள மாலிகை நாராயணபுரம் செல்வது 31

## மூன்றாம் அத்தியாயம்

23. குறத்தியாக ஸ்ரீநிவாசர் 33

24. குறத்தி குறி சொல்லுதல் 34

25. தரணிதேவியுடன் வகுளா உரையாடுதல் 35

26. பத்மாவதி ஸ்ரீநிவாஸரின் திருமண அழைப்பிதழ் 36

27. பிரம்ம – ருத்ராதிகளின் வருகை 38

28. லட்சுமி தேவியின் வருகை 40

29. கடன் பத்திரம் 41

30. பத்மாவதி ஸ்ரீ நிவாஸரின் திருமணம் 43

31. அகஸ்திய ஆசிரம வாசம் 45



32. வசுதானன் தொண்டைமானின் போர் 45

23. விஸ்வரூபம் 48

34. தேவாலய அமைப்பு 48

35. ஆனந்த நிலைய பிரவேசம் 49

36. பீமனுக்கு மோட்சம் அருளுதல் 51

37. தொண்டைமான் சாரூப்யம் அடைதல் 53

38. அர்ச்சா விக்கிரக மூர்த்தி 54

## நான்காம் அத்தியாயம்

39. வேங்கடேஸ்வரருக்கு லட்சுமியின் சிந்தனை 57

40. பாதாளம் சென்ற லட்சுமிதேவி 59

41. அசரீரி வாணியின் அறிவிப்பு 60

42. வேங்கடேஸ்வரரின் தவம் 61

43. கபில முனிவரின் அறிவுரை 62

44. வியூகலட்சுமியின் தோற்றம் 64

45. விஷ்ணுவின் மார்பை லட்சுமி அலங்கரித்தல் 65

46. ஆனந்த நிலையத்தில் லட்சுமியும், திருவேங்கடவரும் 68

47. லட்சுமி, வேங்கடவரின் கேளிக்கை உரையாடல் 68

48. வீரலட்சுமி, சுகதேவரின் ஆசிரமத்தை அடைதல் 72

49. பத்ம தீர்த்தத்தின் சிறப்பு 74

ஶ்ரீ ராமஜயம்

# முதல் அத்தியாயம்

**யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி பாரத !**
**அப்யுத்தானமதர்மஸ்ய ததா த்மானாம் ஸ்ருஜாம்யஹம்!!**
**பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம் !**
**தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே !!**

தர்மம் அழிந்து அதர்மம் தலையோங்கி நிற்கும் காலத்தில் தனக்குத் தானாக தோன்றுவேன் எனறு ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையில் கூறியுள்ளார். நல்லவரைக் காப்பாற்றி தீயவரைத் தண்டிக்க, தர்மத்தை நிலை நாட்ட இறைவன் இவ்வுலகில் அவதரித்தது உண்டு. கடவுள் எந்த வடிவத்தில் தோன்றுகிறாரோ அதனை அவதாரம் என்று கூறுவர். அவதாரம் என்ற சொல்லுக்கு, இறங்குதல் முதலிய பல அர்த்தங்கள் உண்டு. விஸ்வவியாபியாக உள்ள பரமாத்மா பக்தர்களுக்கு அருள் புரிவதற்காக சகுண சாகார ரூபமாக உலகில் தோன்றுவதை அவதாரம் என்று கருதலாம்.

**தசாவதாரம்**

புராண இலக்கியங்கள் மஹாவிஷ்ணுவின் தசாவதாரத்தைக் குறித்து மிக விரிவாகப் பேசுகின்றன. உலக நன்மைக்காக பரம்பொருள் பத்து அவதாரங்களை எடுத்தார் என்பதனைக் கீழ் கண்ட சுலோகம் கூறுகிறது.

**பரோபக்ருதி கைவல்யே அதுலத்வாஜ்ஜககுரு: !**
**குர்வீம் சோபக்ருதிம் மத்வா அவதாரம் தசாக்ரஹீத் !!**

உலகத்திற்கு குருவான ஸ்ரீமந்நாராயணனுக்கு ஒரு நாள் சந்தேகம் ஒன்று தோன்றியதாம். ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீதேவி பிராட்டி சேவிக்க நிம்மதியாகக் காலத்தைக் கழிப்பது நல்லதா ?

சிருஷ்டியில் ஜீவன்களின் துன்பத்தைப் போக்கி, அவர்களுக்கு நன்மை செய்வது நல்லதா என்று சிந்தித்தாராம்.

இவ்வாறு இரண்டு யோசனைகளை தராசில் வைத்து பார்க்கும்போது பிறருக்கு உபகாரம் செய்வதே சிறந்தது என்று தராசு தட்டு கூறிற்றாம். இதனைக் கண்ட இறைவன் பிறருக்கு நன்மை செய்வதே சிறந்தது என்று நிச்சயித்துக் கொண்டு பத்து அவதாரங்களை எடுத்தார். தீயவரைத் தண்டித்து நல்லவரை காப்பாற்றி தர்மத்தை நிலை நாட்டினார்.

மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரஸிம்ஹ, வாமன, பரசுராம, ஸ்ரீராம, பலராம (கிருஷ்ண), புத்த, கல்கி என்பவை புராணங்களின் படி பத்து அவதாரங்களாகும். இவை மட்டும் அல்லாமல் கபிலர், தத்தாத்திரேயர், ஸநகாதிகள், நரநாராயணர்கள், துருவர், ப்ருகு, வ்ருஷபர், சுக்ரீவர், ஹம்ஸம், மனு, தன்வந்தரி, வியாஸர் என்று சில அவதாரங்களைப் பற்றி ஸ்ரீமத் பாகவத புராணம் கூறுகிறது.

இவைகளைத் தவிர இறைவனின் லீலாவதாரங்கள் கணக்கிலடங்காது உள்ளன என்று ஸ்ரீமத்பாகவத புராணம் கூறுகிறது.

'தரணி ரேணுல நயன கனுதிம்ப நலவியகும்காணியம் மஹாத்முனி லீலாவதாராத்புத கர்மம்புலு லெக்கபெட்ட நெவரிகி நசக்கியமையுண்டு.' (தெலுங்கு பாகவதம், 2.199)

மஹாவிஷ்ணுவின் அவதாரங்களைப்பற்றி பல புராணங்கள் குறிப்பிடுகின்றன. சிவபெருமானுக்கு அவதாரங்கள் இல்லையா ? என்று சிலர் கேட்பார்கள். சிவனுடைய அவதாரங்களைப் பற்றியும் சிவ புராணங்கள்



சொல்லுகின்றன. ஆனால் அழிக்கும் தொழில் செய்கின்ற சிவனைக் காட்டிலும், காக்கும் தெய்வமான திருமாலுக்கு தான் உலகைக் காக்கும் கடமை அதிகம். ஆகையால் திருமாலின் அவதாரங்களையே பலபுராணங்கள் சிறப்பாகப் பேசுகின்றன.

தர்மம், அதர்மம் இவை இரண்டிற்கும் சேர்ந்தபடி, இறைவனின் அவதாரங்களைக் குறித்து அன்னமாச்சாரியார் அவர்கள் இப்படிக் கூறியுள்ளார்.

**அடவி தர்மமமு செடி அதர்மமமைநா மேலு**
**வேடகு முனுலு விந்துன விந்துரு நீகு**
**தடவி தர்மமு நில்ப தரணி புட்டுடு வீவு**
**படி நின்னு சேவிஞ்சி ப்ரதுகுதுமபுடே. [2.161]**

"தர்மம், அழிந்து அதர்மம் தோன்றியது என்று முனிவர்கள் உன்னிடம் விண்ணப்பித்தார்கள். தர்மத்தை நிலைநிறுத்த தரணியில் நீ பிறப்பாய். அப்பொழுது உன்னைச் சேவித்து வாழ்வோம்."

ஐஸ்வர்யம், தர்மம், கீர்த்தி, சௌந்தர்யம், ஞானம், வைராக்கியம் என்னும் குணாதிசயங்களை அவதாரங்கள் நன்கு தெளிவுபடுத்துகின்றன.

கிருதயுகத்தில் பகவான் மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரஸிம்ம, வாமன – என ஐந்து அவதாரங்களை எடுத்தார். திரேதாயுகத்தில் பரசுராம – ஸ்ரீ ராம அவதாரங்களாகத் தோன்றினார். துவாபரயுகத்தில் பலராம – கிருஷ்ணாவதாரங்களாகத் தோன்றினார். கலியுகத்தில் புத்தாவதாரம் முடித்து, கல்கி அவதாரம் இனி எடுக்கப் போகிறார் என்று புராணங்கள்

கூறுகின்றன. தர்மம் நான்கு பாதங்களில் நடக்கும்போது இறைவன் ஐந்து அவதாரங்களை எடுத்ததேன்? அந்தயுகத்தில் தர்மத்துக்கு எவ்விதமான அழிவுநேராமல் காத்திட இறைவன் அத்தகைய அவதாரங்களை எடுக்க வேண்டியதாயிற்றோ, என்னவோ ?

புத்தாவதார விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. புராணத்தில் கூறிய புத்தன் தான் புத்தாவதாரம் என்று சிலரும், வரலாற்றில் கூறப்பட்ட புத்தரே புத்தாவதாரம் என்று சிலரும் கருதுவார்கள். அவதாரங்களில் பலராம அவதாரம், ஸ்ரீகிருஷ்ணாவதாரம் இவற்றைத் தனித் தனியாகக் கருதுபவர்கள், புத்தரை ஒரு அவதாரம் என்று சம்மதிப்பதில்லை.

அவதாரங்களில் பல்வேறு வகைகள் உண்டு. அம்சாவதாரம், பூர்ணாவதாரம், கலாவதாரம், லீலாவதாரம், திவ்யாவதாரம், ஆவேசாவதாரம், அர்ச்சாவதாரம், அந்தர்யாமி, விபவ – கல்யாண– குணாவதாரம் முதலானவை.

**ஐந்து ஸ்வரூபங்கள்**

‘எம்பெருமானின்’ பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சா என்ற ஐந்து நிலைகளில் அர்ச்சாஸ்வரூபம் சிறந்ததாகக் கருதப்படுகின்றது.

1. ஸ்ரீவைகுண்டத்தில் நித்யசூரிகள் முக்தபுருஷர்கள் திருமாலை அனுபவித்திருக்கும் நிலையில்



சேஷபர்யங்கத்தின் மீது ஸ்ரீதேவி பூமிதேவிகளோடு சேர்ந்து வீற்றிருக்கும் நிலை பரஸ்வரூபம்.

2. படைத்தல், காத்தல், அழித்தல் செய்யவும், பக்தர்களுக்கு அருள் புரிவதற்காகவே அவர்களை நோக்கி நிற்கும் நிலை வ்யூஹ ஸ்வரூபம். இவை விஷ்ணு, புருஷ, சத்ய, அச்யுத, அநிருத்த எனும் ஐந்து வகைகளாக உள்ளன என்று வைகானச ஆகமம் கூறுகிறது.

3. தீயவரை அழித்து நல்லவரைக் காப்பாற்றுவதற்காகத் தோன்றிய இராம, கிருஷ்ண அவதாரங்கள் விபவ ஸ்வரூபமாகும்.

4. ஞானத்தால் மட்டுமே தோன்றி, எல்லா ஜீவராசிகளின் இதயக் கமலங்களின் உள்ளே செயலாற்றும் முறையில் உள்ள ஸ்வரூபம் அந்தர்யாமி.

5. தேசம் காலம் என்பவை இல்லாமல் எல்லாவற்றையும் தாண்டி தன்னை ஆஸ்ரயித்தவர்களால் சம்மதிக்கப் பட்ட உலோகம் – சிலை முதலிய வஸ்துக்களில் தோன்றி ஆலயங்களிலும் வீடுகளிலும் வழிபடும் நிலை அர்ச்சா ஸ்வரூபம்.

**அர்ச்சாவதாரத்தின் சிறப்பு**

‘அர்ச்சாவதாரஸ்ஸர்வேஷாம் பாந்தவோ பந்துவத்ஸவ:’ என்றபடி அர்ச்சாரூபம் நெருங்கிய முறையில் ஸௌசீல்யம், வாத்ஸல்யம், ஸ்வாமித்துவம், ஆகிய குணங்களுடன் விளங்கும் தோற்றமாகும். இது ஸ்வயம்வ்யக்தம். திவ்யம்,

ஸைத்தம், மானுஷம் – என்று நான்கு வகைகளாக ஜீவர்களுக்காகப் பிரிக்கப் பட்டது.

தானே தோன்றிய நிலையில் உள்ள வடிவம் ஸ்வயம்வ்யக்தம் என்பார்கள். தேவ–ருஷிகணங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்தி திவ்ய ஸ்வரூபமாகும். யோகசித்தி பெற்ற மஹாபுருஷர்களால் பிரதிஷ்டை செய்யப் பட்டவை ஸைத்த மூர்த்திகள். மனிதர்களால் ஆகமசாஸ்த்ரவிதி முறையில் பிரதிஷ்டை செய்யப் பட்டவை மானுஷ மூர்த்திகளாகும். (ரிஷிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூர்த்திகள் மேற்கூறிய வகைகளில் சேர்ந்துவிடும்.)

**அருள்மிகு திருவேங்கடநாதனின் அர்ச்சாவதாரம்**

கலியுகத்தில் வேங்கடகிரிமீது தோன்றும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஸ்வயம்வ்யக்தமாக அர்ச்சாமூர்த்தியாகத் தோன்றியவர் என்று பக்தர்களின் நம்பிக்கை. தினம்தோறும் கணக்கிட முடியாத அளவிற்கு உலகின் நான்கு திசைகளிலிருந்தும் பக்தர்களை இந்த ஸ்வரூபம் வசீகரிக்கிறது.

**வேங்கடாத்ரி ஸமம் ஸ்தாநம்**
**ப்ரஹ்மாண்டே நாஸ்தி கிஞ்சன !**
**வேங்கடேச ஸமோ தேவோ**
**ந பூதோ ந பவிஷ்யதி !!**

என்ற புராணவாக்கியத்தினபடி வேங்கடாத்திரிக்கு ஈடான பவித்திர பூமி இவ்வுலகில் வேறெங்கும் இல்லை. வேங்கடேசப் பெருமாளுக்குச் சமமான தெய்வம் இப்போதும் எப்போதும் (எதிர்காலத்திலும்) கிடையாது என்று திருவேங்கடநாதனின் பக்தர்கள் ஏழுமலையானைக் கொண்டாடுகிறார்கள்.



“அராயி காணே விகடே கிரிம் கச்ச சதான்வே” என்ற ரிக்வேத மந்திரம் திருவேங்கடகிரியின் சிறப்பைக் கூறுகின்றதென்று பலரின் கருத்தாகும். வாழ்க்கையில் இன்னல்கள் நேரிடும்போது ஸ்ரீ நிவாஸப் பெருமாள் சேவை செய்திட திருவேங்கடத்திற்குச் செல்லுங்கள் என்று ஸ்ரீ பவிஷ்யோத்தர புராணத்திலும்.

**“அராயி கானே விகடே கிரிம் கச்சேதி தம் விது:!**
**ஏவம் வேதமய: ஸாக்ஷாத் கிரீந்திர: பன்னகாசல:!!”**

கூறப்பட்டுள்ளது.

ஆபத்பாந்தவர், அனாதரட்சகர், ஏழுமலையான், கலியுகதெய்வம், வட்டியை வசூலிப்பவர், கூப்பிட்டக் குரலைக் கேட்பவராகிய ஸ்ரீவேங்கடேஸ்வர சுவாமி திருமலையில் தோன்றி எண்ணற்ற அருளோடு, தன்னை ஆஸ்ரயித்தவர்களைக் காப்பாற்றிக் கொண்டு இருக்கிறார்.

திருமால், விக்ருதி நாம ஸம்வத்ஸரம், அசுவனி நட்சத்திரத்தில் பஞ்சமி தினம் வியாழக்கிழமை என்னும் சுபதினத்தில் ஆனந்த நிலையத்தில் பிரவேசித்தார்.[1]

இடுப்பின் பாகத்தில் இடது கையை வைத்து தன்னை சேவித்தவர்களின் பிறப்பெனும் கடல் முழங்கால் ஆழமே என்று குறிப்பிடுகிறார். அதேபோல் வலதுகையால் தன் பாதத்தைக் காட்டியவாறு, தன்னிடம் சரணடைந்தவர் மோட்சம் பெறுவது உறுதியென்று குறிப்பிடுகிறார்.

1. (பார்க்க வேங்கடாசல மகாத்மியம் 5–293).

# இரண்டாம் அத்தியாயம்

இவ்வாறு அருள்மிகு திருவேங்கடமுடையானுடைய திவ்விய அவதாரத்திற்குச் சம்பந்தமான வரலாற்றினைப் புராணங்கள் உரைத்தபடி சுருக்கமாகத் தெரிந்து கொள்ளுவோம்.

**நாரத மகரிஷியின் கேள்வி**

அது நைமிசாரண்ய க்ஷேத்திரம். சௌநகாதி முனிவர்கள் ஸூதமகரிஷி கூறும் புராணக் கதைகளை ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தனர். கதைகளைச் சொல்லும் போது இடையில் வராக புராணக் கதையைக் கூறினார். அதில் திருவேங்கடாசலத்தைக் குறித்த விஷயங்கள் வந்தன.

கதையைக் கேட்ட முனிவர்கள் வேங்கடாத்திரி எந்த யுகத்தில் இவ்வுலகத்தில் தோன்றி புகழ் பெற்றது என்று ஸூதமகரிஷியைக் கேட்டனர். மகரிஷியும் இவ்வாறு கூறினார்: "உங்கள் கேள்விக்குப் பதில் கூறுகிறேன் வேங்கடாசலத்தின் புகழையும் மலை மேல் வீற்றிருக்கும் திருவேங்கடநாதனின் வாழ்க்கை வரலாற்றையும் கூறுகிறேன்" என்று சொல்லத் தொடங்கினார்.

பிரம்மாவின் புத்திரர் நாரத முனிவர் ஒரு முறை பூவுலகத்திற்கு வந்து கங்கை நதிக் கரையை அடைந்தார். கஸ்யபர் முதலிய மகரிஷிகள் அங்கு வேள்விகள் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் தேவரிஷியை முறைப்படி பூஜித்தார்கள். அவருடைய வருகைத் தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகக் கூறினார்கள்.

அப்பொழுது நாரத முனிவர், "மகரிஷிகளே! நீங்கள் வெகு கவனத்தோடு இந்தப் புனிதமான பூமியில் வேள்விகள் செய்கிறீர்கள். இந்த வேள்வியின் பலனை உரியவர்களுக்குச்



சமர்ப்பிக்க வேண்டுமல்லைவா? யாருக்குச் சமர்ப்பிக்கலாம் என்ற நோக்கத்தில் செய்கிறீர்களோ தெரியப்படுத்துங்கள்" என்று கேட்டார்.

அதனைக் கேட்ட பிருகு முதலான முனிவர்கள் வேள்வி பலனுக்குரியவர் எவர் என்று அறியமுடியாமல், ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தார்கள்.

அப்பொழுது நாரதர் வீணையில் அஷ்டாக்ஷர மந்திரத்தை மீட்டியபடி "நீங்கள் சிறந்த முறையில் வேள்விகளைச் செய்து மக்களின் பேருவகையை வளர்த்தீர்கள். இது நல்லதே. ஆனால் மக்களுக்கு பல வரங்களை அருளும் தெய்வங்களான மும்மூர்த்திகளில், யார் மோட்க்ஷத்தை அருள்வார் என்பதனை நன்கு அறிந்து, அதற்குப் பிறகு முக்தி தரும் தெய்வத்திற்கு வேள்வியின் பலனைச் சமர்ப்பியுங்கள்" என்று கூறி அவர்களிடமிருந்து விடை பெற்றார்.

**மும்மூர்த்திகளைச் சோதித்தல்**

நாரதரின் பேச்சைக் கேட்ட முனிவர்கள், ஹரி, ஹரன், பிரம்மா இவர்களில் யார் மோட்க்ஷத்தை அளிக்கக் கூடியவர் ? என்பதை சோதித்து அறிய நினைத்தார்கள். இந்தச் சோதனையை செய்வதற்கு, மகரிஷிகளில் சிறந்தவராகிய பிருகு மகரிஷியே ஏற்றவர் என்று நிச்சயம் செய்தனர். படைத்தல், காத்தல், அழித்தல் என்பதனைக் கடைப்பிடிக்கும் – மும்மூர்த்திகளில், மோட்க்ஷத்தை அளிக்கக்கூடிய மூர்த்தி யார் என்பதனைத் தெரிந்து வர வேண்டும் என்று பிருகு முனிவரை அவர்கள் அனுப்பினார்கள்.

அதற்கு சம்மதித்து பிருகு முனிவர் சத்தியலோகத்திற்கு முதலில் சென்றார். அங்கு பிரம்மதேவனை தரிசித்து நமஸ்கரித்தார். நான்முகன் "அமருங்கள்" என்று கூறுவதற்கு முன்னரே ஆசனத்தில் அமர்ந்தார் முனிவர். நான்முகன் கோபித்துக் கொண்டு முனிவருடன் பேசாமல் மௌனம் சாதித்தார்.

பிருகு மகரிஷி, "பிரம்மதேவன் ரஜோ குணத்தையுடையவர். அவர் மோட்க்ஷத்தை கொடுக்கச் சக்தியில்லாதவர்" என்று முடிவு செய்து "பூவுலகத்தில் நான்முகனுக்கு ஆலய வழிபாடு இல்லாது போகக்கடவது" என்று சபித்தார். அங்கிருந்து அவர் கைலாசத்திற்குச் சென்றார்.

பிருகு மகரிஷி கைலாசம் சென்ற பொழுது அங்கு சிவபெருமான் பார்வதி தேவியுடன் தனிமையில் பேசிக் கொண்டிருந்தார். முனிவரைப் பார்த்தவுடன் பார்வதி வெட்கப்பட்டாள். "ஏகாந்தமாக தம்பதியர் இருக்கும் பொழுது மகரிஷி வரக்கூடுமா?" என்று கோபித்த சிவபெருமான் மௌனம் சாதித்தார்.

பிருகு மகரிஷி சிவபெருமானின் நோக்கத்தை கவனித்து "இவர் தமோ குணமுடையவர், மோட்சத்தை அளிக்கக்கூடியவர் அல்லர்" என்று தீர்மானித்துக் கொண்டார். இவருக்கு, லிங்க வடிவத்தில் பூஜைகளைத் தவிர, மூர்த்தி வடிவில் இருக்கலாகாது என்று சபித்தார்.

அங்கிருந்து ஸ்ரீவைகுண்டம் சென்ற பிருகுமுனிவர் ஸ்ரீநிவாஸப் பெருமாள், ரமா தேவியோடு சேஷ சயனத்தில் வீற்றிருந்ததைக் கண்டார். உடனடியாகச் சிறிதும் சிந்திக்காமல்



திருமாலின் திருமார்பின் மீது காலால் எட்டி உதைத்தார். திருமால் உடனடியாக எழுந்து நின்று முனிவரை சாஸ்திர முறைப்படி அர்ச்சித்தார். தன்னை உதைத்த பாதத்தை மடியின் மீது வைத்து மென்மையாக அழுத்தியவாறு இவ்வாறு கூறினார்.

"முனிவரே ! உங்கள் வருகையைக் கவனிக்காமல் சயனித்திருந்தேன். இந்த அபசாரத்தைச் சகித்து என்மீது கருணைக் காட்டுங்கள். கடினமான என் மார்பைத் தீண்டிய உங்கள் பாதம் எவ்வளவு நொந்து விட்டதோ என்னவோ ? துளிர்ப் போன்ற இப்பாதத்தால் எனக்கு எவ்விதமான வலியுமில்லை" என்று முனிவருக்கு ஆறுதல் கூறினார்.

இவ்வார்த்தையைக் கேட்ட பிருகு மகரிஷி மிக்க மகிழ்ச்சி அடைந்தார். தான் செய்த தவறை உணர்ந்து அச்சமுற்று தலை வணங்கி "சுவாமி! நீங்கள் சாஸ்வத சத்துவமூர்த்தி, மகோன்னதமானவர்" என்று ஹரியைத் துதித்தார். "மோட்சத்தை அருளக் கூடியவர் ஸ்ரீநிவாஸப் பெருமாள் ஒருவரே" என்று நிச்சயித்துக் கொண்டார். பிருகு மகரிஷி கங்கை நதிக் கரையை அடைந்து காஸ்யபர் போன்றவரிடம் "மோட்சத்தை அளிக்கக்கூடிய ஆற்றல் தேவதேவன் ஒருவருக்கே உண்டு" என்று அறிவித்தார். முனிவர்களும் அதற்குச் சம்மதித்து வேள்வி பலனை ஸ்ரீஹரிக்குச் சமர்ப்பித்து, விஷ்ணு தியானத்தில் ஆழ்ந்தனர்.

**ஸ்ரீவைகுண்டத்தை விட்டு லட்சுமி தேவி வெளியேறுதல்**

பிருகு மகரிஷி விஷ்ணுவின் மார்பைக் காலால் உதைத்த பொழுது லட்சுமி தேவி பெருமாளின் மார்பிலிருந்தார். பிராட்டிக்கு பிருகுவின் மீது அளவுக் கடந்த கோபம் வந்தது.

அவர் திருமாலை நோக்கி "பரம் பொருளான உங்கள் மார்பில் நான் வாசம் செய்கிறேன். பரபுருஷன் ஒருவன் வந்து உங்களை உதைத்தான். நீங்களும் மகிழ்ச்சியைத் தெரிவித்தீர்கள். ஆனால் இதைச் சகிக்க முடியவில்லை, நான் முனிவரை ஏதேனும் கூறி விட்டால் நீங்கள் அதற்குச் சம்மதிக்க மாட்டீர்கள். ஆகையால் நான் இனி இங்கு வாசம் செய்ய மாட்டேன். தவம் செய்யப் போகிறேன். உங்கள் பாதங்களை மனதில் தியானித்து தவம் புரியும் ஞானத்தை எனக்கு அருள் புரிவீர்களாக!" என்று சொன்னார்.

அப்படிப் பேசிய பிறகு, வைகுண்டத்தை விட்டு வேறு எவ்விடத்திற்கோ செல்ல இருக்கும் பிராட்டியை திருமால் பல்வேறு முறைகளில் சமாதானம் செய்ய முயன்றார். ஆனால் அவர் சாந்தியடையவில்லை. அவரைத் தடுத்து நிறுத்த முயன்ற திருமாலின் முயற்சிகள் எல்லாம் பயனற்றவையாயின. திருமாலும் மௌனம் சாதித்தார். லட்சுமி தேவியும் வைகுண்டத்தை விட்டு பூவுலகில் கொல்லாபுரம் வந்து சேர்ந்தார். அங்குள்ளவர்கள் அவரைப் பக்தியுடன் ஆராதித்து வழிபட்டார்கள். இவ்வாறு லட்சுமி, நாராயணன் இருவரிடையே நடந்த பிரணய கலகம், லட்சுமிவாஸத்தை வைகுண்டத்திலிருந்து கொல்லா(ஹா)புரத்திற்கு மாற்றியது.

**வேங்கடாசலம் சென்ற திருமால் :**

ஸூதபௌராணிகரின் உரையைக் கேட்ட சௌநக முனிவர் இவ்வாறு கூறினார்:– "ஸ்ரீநிவாஸரின் பெரிய பிராட்டி லட்சுமி தேவி தன்னை விட்டு வெகு தூரம் சென்றதால், பூமிதேவி, நீளாதேவி– இவர்களின் மீது மோகம் கொண்டு



வைகுண்டத்திலேயே முன்பு இருந்தது போல ஆனந்தமாக இருந்துவிட்டாரா? இல்லையெனில் லட்சுமியின் பிரிவைத் தாங்காமல் வேதனை அடைந்தாரா ?" அதைக் கேட்ட ஸூதமுனிவர் இவ்வாறு கூறினார்:– "விஷ்ணு மூர்த்தியால் லட்சுமியின் பிரிவைத் தாங்கமுடியவில்லை. பிரிவினால் ஏற்பட்ட துன்பத்தால் இவ்வாறு நினைத்தார் "ஐயோ ! நித்யானபாயினி லட்சுமி தேவியின் பிரிவு ஏற்பட்டு விட்டது. வினைப் பலனை யாரால் தப்பித்து கொள்ள முடியும். அவள் எங்கிருந்தாலும் என் இதயத்திலே வாசம் செய்து கொண்டிருப்பாள். என்னை விட்டுச் செல்ல இயலாது. நான் அவள் இதயத்திலே நின்று அவளை என் நெஞ்சில் நிறுத்தி உலகைக் காக்கும் தொழிலைச் செய்கிறேன். ஆயினும் உலக வழக்கப்படி அவளைத் தேடாமல் இருக்கலாகாது. இல்லையெனில், என்னை இதயமற்றவன் என்று மக்கள் தூற்றுவார்கள்." வேங்கடாசலம் வந்த விஷ்ணுமூர்த்தி என்று எண்ணினார்.

திருமால் வைகுண்டபுரத்தை ரட்சிப்பதற்குக் காப்பாளர்களை நியமித்து, பூமிதேவி, நீளாதேவிகளையும் அவர்களின் பாதுகாப்பில் வைத்தார். லட்சுமிதேவி எங்கிருந்தாலும் தேடி வருவதாக அவர்களிடம் கூறி விட்டு, வைகுண்டத்தை விட்டு பூவுலகில் வேங்கடகிரி வந்து சேர்ந்தார்.

அந்த மலையின் மேல் வராஹ ஸ்வாமிக்கும் புஷ்கரணிக்கும் தென் திசையிலுள்ள புளிய மரத்தை நோக்கிச் சென்றார். அந்த மரத்தின் அடிவாரத்திலுள்ள புற்றுக்குள் நுழைந்தார். பத்தாயிரம் வருடங்கள்வரை யாருக்கும் தென்படாது இருந்து விட்டார்.

அப்பொழுது பூவுலகில் 28வது துவாபரயுகம் சென்று கலியுகம் வந்தது. அறநெறியுள்ள சோழ அரசன் தர்மத்திற்குக் கட்டுபட்டு பூவுலகத்தை ஆண்டு வந்தான்.

**பசு, கன்றுவாக உருமாறிய பிரம்மாவும், ருத்திரரும்**

வைகுண்டத்தை விட்டு கொல்லாபுரம் வந்து சேர்ந்த திருமகள், தன்னைத்தேடி வந்த திருமால் வேங்கடகிரியிலுள்ள புளியமரத்தின் அடிவாரத்தில் புற்றுக்குள் உள்ளார் என்பதனை அறிந்து கொண்டார். அவர் நலத்தைப் பற்றி சிந்தித்தார். ஆனால் தன்னுடைய பிடிவாதத்தை விடக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டார். தனிமையில் உள்ள தன் பதியின் மேல் இரக்கங் கொண்டு ஓர் ஆய்ச்சி வடிவத்தில் தனியாகச் சென்று சோழ நகரத்தை அடைந்தார். அங்கு சோழ அரசனின் மனைவி வசிக்கும் மணிமண்டபத்தை நெருங்கினார்.

இதனிடையில் லட்சுமி பிராட்டி திருமாலை நினைத்துக் கொண்டு இருக்கிறார் – என்பதையறிந்த பிரம்மதேவன் பசுவாகவும் சிவன் கன்றாகவும் மாறி லட்சுமி தேவியின் அருகில் வந்தார்கள். இப்படி பசு, கன்று வடிவத்தில் உள்ளவர்களைப் புரிந்து கொண்ட லட்சுமி தேவி “இந்த பசுவையும் கன்றையும் நான் விற்பனை செய்யப் போகிறேன்” என்று அறிவித்து அங்கே திரிந்து கொண்டிருந்தார். அவர் கூவிச் சென்றதைக் கேட்ட அரசனின் மனைவி தன் குழந்தைக்குப் பசும்பால் கொடுக்க வேண்டுமென்று நினைத்து பசுவிற்கும், கன்றிற்கும் தகுந்த பணத்தை கொடுத்து வாங்கிக் கொண்டாள்.



புற்றிலுள்ள ஹரியைப் போஷிப்பதற்கு இந்த பசு–கன்றுகள் பயன்படும் என்று நம்பி லட்சுமிதேவி நிம்மதியாக கொல்லாபுரம் வந்து சேர்ந்தார். சோழ அரசனின் பசுக்களில் ஒன்றாக உள்ள பிரம்மா, தினந்தோறும் பசுக்களோடு வேங்கடகிரி சென்று புற்றில் உள்ள திருமாலுக்குப் பாலை சமர்ப்பிக்கத் தொடங்கினார். பெருமாளும் பிரம்ம ருத்திரைப் பாராட்டினார் தினமும் கோ ரூபத்திலுள்ள பிரம்மா கொடுத்த பாலோடு தன் பசியைத் தீர்த்துக் கொண்டார்.

**பாலில்லாத பசு**

சோழ அரசனின் ராணி (மனைவி) தன் மகனுக்கு பால் வேண்டுமென்று பசுவை கொண்டு வரச் சொல்லி பால் சுரக்கப் போனாள். ஆனால், அதில் பால் இல்லை. “என்ன ஆச்சரியம்! மடியோ பால் உள்ளது போன்றுள்ளது; ஆனால் ஒரு துளி பால்கூட இல்லையே! இதற்கு என்ன காரணம்” என்று ஆச்சரியப்பட்டாள். உடனடியாக மாடு மேய்ப்பவனைக் கூப்பிட்டு பசுவைச் சுட்டிக்காட்டி பால் என்னவாயிற்று? நீயே குடித்து விட்டாயா என்று அதட்டிக் கேட்டாள். அதற்கு அவன் “அம்மா நான் எந்தப் பாவமும் அறியாதவன். பாலை நான் குடிக்கவில்லை. ஒரு வேளை கன்று முழுமையாகக் குடித்து விட்டதோ என்னவோ” என்று கூறினான். கன்று வீட்டில் தானே இருந்தது. இது எப்படி குடித்திருக்குமென்று, ராணி கோபித்து அவனைக் கட்டி அடிக்கச் செய்து விடுவித்தாள்.

**மாடு மேய்ப்பவன் மாண்டான்**

அந்த மாடு மேய்ப்பவன் அழுது கொண்டே மறுநாள் அந்த பசுவின் பின் சென்று அதைக் கவனித்தான். அதுவும் வேங்கடகிரி

(சேஷாத்ரி) மீதுள்ள புற்றில் பாலைச் சொரிவதைக் கண்டான். உடனே அவன் சினம் கொண்டு கோடாலியை எடுத்து பசுவின் நெற்றியின் மீது அடிக்கப் போனான். இந்தப் பசுவைக் காப்பாற்றப் புற்றிலிருந்து கோவிந்தன் வெளியேறி பசுவின் தலைக்கு நேர் தன் தலையைக் குறுக்கே வைத்தார். ஆகையால் கோடாலியின் அடி சுவாமியின் தலை மீது வீழ்ந்தது. குருதி (இரத்தம்) ஏழு பனைமரம் அளவிற்கு மேல் நோக்கிப் பாய்ந்து சிதறி கீழே வீழ்ந்தது. அதைப் பார்த்த மாடு மேய்ப்பவன் பயத்தால் தரையில் வீழ்ந்து உயிரை விட்டான்.

பசுவும் மலையை விட்டு இறங்கி வந்து நேராகச் சோழ அரசன் சபைக்குச் சென்றது. அங்கு தரையில் வீழ்ந்து அழுது புரண்டது. அரசன் காலைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டது. பிறகு அங்கிருந்து செல்வதைப் பார்த்த அரசன், அதன் பின்தொடர்ந்து செல்லும்படி தன் உளவாளிகளை அனுப்பினான். பசுவும் வேங்கடாத்திரியை அடைந்து புற்று இருந்த இடத்தில் நின்றது. புற்றிலிருந்து குருதி சிதறிய காட்சியைப் பார்த்த உளவாளிகள் அச்சம் கொண்டனர். அரசனிடம் ஓடி வந்து நடந்ததைத் தெரிவித்தார்கள்.

அரசரும் சட்டென்று எழுந்து, தன் பரிவாரங்களோடு வேங்கடாத்திரிக்கு வந்தார். அங்கு நடந்த சம்பவத்தைப் பார்த்து நடுங்கினார். குருதி வெள்ளமும் மாடு மேய்ப்பவனின் மரணமும், பசுவின் அழுகை – இவற்றிற்குக் காரணமென்னவாக இருக்கும் என்று மந்திரிகளைக் கேட்டான்.



## சோழ அரசன் பெற்ற சாபம்

அப்பொழுது புற்றிலிருந்து உதிரத்தால் நனைந்த ஸ்ரீநிவாஸ பெருமாள் சங்கு சக்கிரங்களை கையில் ஏந்தியவாறு அரசனைப் பார்த்து "பாவி ! நான் புற்றினில் ஒளிந்திருக்கையில் மாடு மேய்ப்பவன் இங்கு எனக்குத் தினமும் பால் கொடுத்துவந்த பசுவை அடிக்கப்போய் என்னைக் காயப்படுத்தினான். அந்த பாவத்தினால் அவன் மரணம் அடைந்தான். நான் ஒரு பரதேசி, எனக்கு யாருமில்லை. காப்பாற்றுவார் யாருமில்லை. இந்தப் புற்றிலிருந்து கொண்டு காலம் கழித்துக் கொண்டிருக்கிறேன். தாய் போல் வந்த இந்தப் பசுப் பாலைக் கொடுத்து என்னைக் காப்பாற்றி வந்தது. இதனைச் சாகடிக்க நினைத்த இந்த மாடு மேய்ப்பவன் அந்த பாவத்திற்குரிய தண்டனையை அனுபவித்துள்ளான். அவன் உனக்குச் சொந்தமானவன். என்னை அடித்தப் பாவ பலனை நீயும் அனுபவிக்க வேண்டும். இனி நீ பேயாகி அலைவாயாக!" என்று கூறினார்.

அதைக்கேட்ட அரசன் மூர்ச்சையடைந்து பூமியில் வீழ்ந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு தெளிவடைந்து ஸ்ரீவேங்கடேஸ்வரரை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, மிக்க வேதனையுடன் அரசன் இப்படி முறையிட்டான். "சுவாமி ! நான் தெரிந்து இப்பாவத்தைச் செய்யவில்லை. என் மீது கோபங்கொண்டு பயங்கரமான இச்சாபத்தைக் கொடுத்தீர்கள். உங்கள் பாதங்களைச் சரண் அடைகிறேன். என் மீது கருணை கொண்டு இச்சாபம் நீங்கும் வழியைக் கூறுங்கள்" என்றான். அதைக் கேட்ட ஸ்ரீநிவாஸன்:– "அரசனே ! என் சாபம் வீணாகாது. கலியுகம் உள்ளவரை நீ இந்தச் சாபத்தை அனுபவிக்கத் தான் வேண்டும். ஆகாச ராஜாவின் புதல்வி பத்மாவதியை நான்

விவாகம் செய்யும் சமயம் வரும். அப்பொழுது அந்த அரசன் என் தலையில் கீரிடம் வைப்பான். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அந்த கிரிடத்தை என் தலையில் அணிந்து கொள்வேன். அந்த சமயம் உனக்குச் சுகம் ஏற்படும்'' என்று கூறினார். இப்படி சாபத்தைப் பெற்ற சோழ அரசன் அங்கிருந்து மறைந்து விட்டான்.

ஸ்ரீநிவாஸப் பெருமாள் மீண்டும் புற்றில் நுழைந்தார். தலைவலியைத் தாங்காமல் பிருகஸ்பதியை நினைத்தார். தேவகுரு வந்தவுடன் அவரிடம் நடந்ததைக் கூறினார். "கால கர்மங்களாலும் கிரக சஞ்சாரத்தினாலும் இத்தீங்கு நடந்தேறியுள்ளது. இதற்குரிய மருந்தைக் கொண்டு வரச் சொல்லுங்கள்'' என்று கூறினார். அதற்கு பிருகஸ்பதியும் "ஸ்வாமி ! உங்களுக்கும் கால கர்மங்கள். கிரக சஞ்சாரங்கள் உண்டா என்ன ? நல்ல மருந்து தரச் சொன்னீர்கள். அத்திப்பாலை எருக்கம்பஞ்சில் நனைத்து காயத்தின் மேல் பூசினால் வலிக் குறைந்து விடும்" என்று சொல்லிச் சென்றார்.

**புளியமரம் - புற்று**

இதைக் கேட்ட சௌநகர், "சூதரே ! அந்தப் புளியமரம் அதன் புற்றுக்குள்ளச் சிறப்புக்களைப் பற்றியும் தெரிவியுங்கள்" என்று கேட்டார். அதற்கு சூதர் இவ்வாறு பதில் உரைத்தார்.

திரேதாயுகத்தில். கௌசல்யா–தசரதர்கள் இறுதி காலத்தில் இராமனிடம் உள்ள அளவிட முடியாத மோகம் அகலாமலேயே உயிர் விட்டார்கள். அக்கடனைத் தீர்க்க பிரம்மதேவன் ஸ்ரீநிவாஸருக்குக் காப்பாக இருக்க வேண்டுமென்று தசரதனின் தேஜஸ்ஸைப் புளியமரமாக உண்டாக்கினார். கௌசல்யாவின் தேஜஸ்ஸை புற்றாக மாற்றி விட்டார்.



தேவகி–வசுதேவர்களும் கிருஷ்ணன் மீதுள்ள புத்திர வியாமோகத்துடன் உயிர் நீத்தார்கள். ஆகையால் வசுதேவரினின் தேஜஸ்ஸை புளியமரமாகவும், தேவகியுடைய தேஜஸ்ஸைப் புற்றாகவும் பிரம்மனின் ஆணையின்படி உருவாயினவாம். ஆகையால் தான் ஸ்ரீநிவாஸர் அந்தப் புற்றுக்குள் 10,000 வருடங்கள் இருந்தார்.

இதன் மூலமாக தசரதனே புளியமரமாகவும் கௌசல்யா புற்றாகவும் லட்சுமணனே சேஷாசலமாகவும் அயோத்தியே மலை மீதுள்ள காடாகவும், சரயூ நதியே புஷ்கரணியாகவும் ஸ்ரீராமரே ஸ்ரீநிவாஸராகவும் தோன்றியதாக அறியலாம்.

அதன் பின் வசுதேவரே புளியமரமாகவும், தேவகியே புற்றாகவும், பலராமனே சேஷாத்திரியாகவும், மதுரா நகரமே வேங்கடாத்திரியாகவும், ஸ்ரீகிருஷ்ணனின் லீலா மானுஷ்யரூபமே ஸ்ரீநிவாஸப் பெருமாளாகவும் தோன்றியதாக சூதர் சொன்னார். அதைக் கேட்ட சௌனகாதி முனிவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். பிறகு நடந்த வரலாற்றை சூதர் இவ்வாறு கூறினார்.

**வராஹ சுவாமியுடன் சந்திப்பு**

பிருகஸ்பதி கூறியபடி காயத்திற்கு மருந்தைத் தேடிக் கொண்டு ஒரு நாள் காலை நேரத்தில் ஸ்ரீநிவாஸப் பெருமாள் காட்டில் அங்குமிங்கும் அலைந்து திரிந்து கொண்டிருந்தார். அப்பொழுது ஸ்ரீவராஹ சுவாமி நரரூபத்திலுள்ள நாராயணனைப் பார்த்தார். "இவன் ஒரு ராக்ஷசனோ ! என்று பிரமித்து குர்குர் என்ற சப்தத்தைச் செய்தார். அப்பொழுது ஸ்ரீநிவாஸர் ஒரு புதருக்குள் ஒளிந்துக் கொண்டார். ஸ்ரீவராஹ சுவாமி அவரை நோக்கி

புதருக்குள் நுழைந்தார். ஸ்ரீநிவாஸர் ஒரு புறமாக வளைந்து ஓரமாக நின்றார். இதற்குள் ஸ்ரீவராஹ சுவாமி அவர் நரநாராயண மூர்த்தியே என்று தெளிந்தார். அவரருகில் சென்றார். ஸ்ரீநிவாஸரிடம் இவ்வாறு கேட்டார்:–

“வைகுண்டத்தை விட்டு இங்கு எதற்கு வந்தாய் ? உன் மார்பில் லட்சுமி தேவி இல்லையே ! காரணமென்ன ? மானுட உருவில் ஏன் இருக்கிறாய் ? உன் தலையில் காயம் ஏன் ஏற்பட்டது?” என்று வினவினார்.

இதற்கு ஸ்ரீநிவாஸப் பெருமாள் நடந்தவற்றை அத்தனையும் ஸ்ரீவராஹ மூர்த்திக்குத் தெளிவுப்படுத்தினார். இவ்வாறு ஸ்ரீவராஹ ஸ்வாமியும் ஸ்ரீநிவாஸரும் காட்டில் சந்தித்துக் கொண்டனர்.

பிறகு ஸ்ரீநிவாஸர் கலியுகம் முடியும் வரை அவர் வாசம் செய்வதற்கு ஒரு இடம் வேண்டுமென்று ஸ்ரீவராஹ ஸ்வாமியிடம் கேட்டார். அவரும் பணம் கொடுத்தால் காண்பிக்கிறேன் என்று சொன்னார்.

“என்னிடம் லட்சுமி தேவி இல்லையே! அவள் கொல்லாபுரம் சென்று விட்டாள். பணம் யார் தருவார்கள் ?” என்றார். மேலும் ஸ்ரீநிவாஸப் பெருமாள் இந்த பூமண்டலம் யாவும் உன் வசமுள்ளது. அதிலிருந்து கொஞ்சம் எனக்குக் கொடுக்க வேண்டும் . நீ கொடுத்த இடத்திலேயே நான் வாசம் செய்வேன். மனிதனைப் போலவே நடித்து மானிடரை இந்த இடத்திற்கு வரவழைப்பேன். உனக்கு தினமும் பஞ்சாமிருத ஸ்நானம் செய்விக்க ஏற்பாடுகள் செய்கிறேன். பக்தர்கள் முதன் முதலில் உன்னைத் தரிசித்து உனக்குக் காணிக்கை கொடுக்கச்



செய்வேன். உனக்கு நைவேத்தியம் கொடுத்தப் பிறகு நான் சாப்பிடுவேன்” என்று கூறினார்.

அதற்கு ஸ்ரீவராஹ ஸ்வாமி சம்மதித்தார். சேஷாத்ரி மீது நிற்க இடம் ஒதுக்கினார். ஸ்ரீவராஹமூர்த்தி தனக்குச் சமையல் செய்யும் வகுளமாலிகையை ஸ்ரீஹரிக்கும் எல்லாவித உபசாரங்களையும் செய்ய நியமித்தார். அவரும் திருமாலுக்குச் சாப்பாடு கொடுத்துக் கொண்டே மருந்தும் அளித்து அவரைக் காத்து வந்தாள்.

பசு கன்றுகளாக மாற்றமடைந்த பிரம்ம ருத்திரர்கள், திருமாலைச் சேவித்தப் பின் தம் கடமை முடிந்தது என்று அங்கிருந்து மறைந்து தம் இருப்பிடம் சென்றனர். ஸ்ரீநிவாஸரும் வேங்கடாத்திரி மீது பக்தர்களுக்கு சகல சௌபாக்யங்களை அருளியவாறு அரக்கரை பயமுறுத்திக் கொண்டு, தாயிடம் பாசமுள்ள குழந்தையைப் போல் வகுளமாலிகையிடம் தங்கிவிட்டார். தலையில் பட்ட காயம் மறைந்து போக லீலா மானுஷ்யரூபத்தோடு வேங்கடாத்திரி மீது நடமாடிக் கொண்டிருந்தார்.

**வகுளமாலிகை**

அதன் பிறகு சௌநகாதி முனிவர்கள் “வகுளமாலிகா என்பவர் யார் ? அவருடைய வரலாறு என்ன?” என்று கேட்டார்கள். அதற்கு ஸூதபௌராணிகர் பதிலளித்தார். துவாபரயுகத்தில் யசோதாதேவி கண்ணனை மிகவும் செல்லமாக வளர்த்தாள். அவள் உயிர் நீத்த பின் மறுபிறவியில் அவள் பாசத்தைத் தொடர பிரும்மா வகுளமாலிகையாக

பிறக்கவைத்தார். அவள் ஸ்ரீபூவராஹ ஸ்வாமியிடம் இருந்து வந்தாள்.

அவளை ஸ்ரீபூவராஹ சுவாமி ஸ்ரீநிவாஸருக்குத் துணையாக இருக்க வைத்தார். தாய் போல் ஸ்ரீநிவாஸரை அவளும் அன்போடு ஆதரித்து வந்தாள். மருந்தைப் பூசி அவருக்கு ஏற்பட்ட காயத்தைப் போக்கினாள். திருமால் ஒரு அழகு தேவதையான அரச குமாரியை மணமுடித்துக் கொண்டார். ஸுதபௌராணிகர் இவ்வாறு சொல்லக் கேட்டு மிக ஆர்வத்துடன் முனிவர்கள் ஸ்ரீநிவாஸப் பெருமாளின் கல்யாண நிகழ்ச்சியைச் சொல்ல வேண்டும் என்று கேட்டார்கள். சூதரும் கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

### ஆகாச ராஜன், தொண்டைமான்

28வது துவாபரயுகத்தின் முடிவில் ஆரம்பமான கலியுகத்தில் எண்ணற்ற அரசர்கள் பூமண்டலத்தை ஆண்டு வந்தார்கள். அவர்களில் சந்திர வம்சத்தைச் சேர்ந்த பாண்டவகுலத்தில் பிறந்த சுவீரன் ராஜ்ஜியத்தை ஆண்டு வந்தான். அவனுடைய மகன் சுதர்மன். சுதர்மரின் மூத்தமகன் தான் ஆகாசராஜன். அவன் மனைவி தரணிதேவி.

ஒரு நாள் ஸுதர்மன் வேட்டையாட காட்டிற்குச் சென்றான். அங்கு ஒரு குளத்தில் நாகக் கன்னிகையைக் கண்டு அவள் மீது மோகம் கொண்டான். அவள் "நான் ஒரு நாக கன்னிகை. உனக்கும் எனக்கும் தாம்பத்தியம் எப்படி நடக்க முடியும்" என்று மறுப்பை தெரிவித்தாள். ஆயினும் அரசனுக்கு அவள் மீதுள்ள மோகம் குறையவில்லை.



பிறகு தன்னுடைய குல கோத்திரங்களை நாககன்னிகைக்குத் தெரிவித்து தனக்கும் அவளுக்கும் பிறக்கும் புத்திரனுக்கு ராஜ்யத்தில் பாதியை அளிப்பதாக வாக்களித்தான். அவளும் அவனை மணப்பதற்குச் சம்மதித்தாள். அவளுக்குப் பிறந்த புதல்வன் தான் தொண்டைமான். இப்படி ஆகாச ராஜன், தொண்டைமான் இருவரும் சகோதரர்கள் ஆனார்கள்.

### பத்மாவதியின் தோற்றம்

ஆகாச ராஜனுக்குப் பிள்ளைப் பேறு இல்லை. "சந்தானம் அடைவதற்கு உபாயம் என்ன ? என்று பிருகஸ்பதியைக் கேட்டான். அதற்கு பிருகஸ்பதி, "நீ விதிமுறைகளை அனுசரித்து புத்திர காமேஷ்டி என்ற யாகத்தைச் செய்தால் புத்திரோதயம் உண்டாகும்" என்று கூறினார்.

அரசனும் அதற்குச் சம்மதித்து வேள்வி செய்யும் நிலத்தை ஓர் மண்வெட்டியால் தோண்டினான். அப்படித் தோண்டுகின்ற நேரத்தில் "ஆயிரம் இதழ்கள்" உள்ள தாமரை ஒன்று தோன்றியது. ஆச்சரியத்தோடு அம்மலரை நோக்கும் போது அங்கு ஒளிமிக்க ஓர் பெண் குழந்தை தோன்றினாள். எல்லோரும் அந்தக் குழந்தையை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். அப்பொழுது அசரீரி வாணி "அரசே! இக் குழந்தையை நன்றாக வளர்த்துக் கொள். உனக்கு எல்லாவிதமான நன்மைகளும் உண்டாகும்" என்று அறிவித்தது.

அரசனும் மிக்க மகிழ்ச்சியுடன் குழந்தையைத் தரணிதேவியிடம் கொடுத்தான். நகரத்தில் உற்சவங்களை

நடத்தினான். தானாகத் தோன்றிய அக் குழந்தையை அரச தம்பதியர் மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார்கள்.

சுகத்தை தரக்கூடிய அந்த பெண்பிள்ளை கிடைத்ததும் தரணி தேவி கர்ப்பவதி ஆனாள். பத்து மாதத்தில் சுப லட்சணத்தோடு ஒரு குமாரனைப் பெற்றெடுத்தாள். அரசனும் மகிழ்ச்சியோடு தான தருமங்களைச் செய்தான். தன் பெண் பிள்ளைக்குப் பத்மாவதி என்றும் குமாரனுக்கு வசுதானன் என்றும் பெயர் சூட்டினான். குழந்தைகள் இருவரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார்கள். பாற்கடலில் தோன்றிய லட்சுமி தேவி, சந்திரனைப் போல இருவரும் வளர்ந்தார்கள். இருவரும் அனைத்து வித்தைகளிலும் சிறந்து விளங்கினார்கள்.

பத்மாவதிக்குத் திருமண வயது வந்தவுடன் அவளுக்கு ஏற்ற வரன் கிடைப்பானா ? என்று அரசன் சிந்தித்தான். குருவிடம் தன் எண்ணத்தைக் கூறினான். குருவும் கண்டிப்பாக அவளுக்கு உகந்த வரன் கிடைப்பான் என்று அரசனுக்கு ஆறுதல் கூறினார்.

**பத்மாவதி வனத்தில் உலா வருதல்**

பத்மாவதி இளமைப் பருவம் அடைந்தாள் அதற்கு ஏற்ப வசந்த காலமும் நெருங்கியது. தோட்டங்கள் யாவும் மலர்களாலும், துளிர்களாலும் கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் காட்சியளித்தன. பத்மாவதி தோழிகளோடு சேர்ந்து ஒரு நாள் தோட்டத்தில் மலர்களைப் பறித்துக் கொண்டே உல்லாசமாக இருந்தாள். தோட்டத்திலுள்ள குளத்தில் ஜலக்கிரீடை செய்தாள்.



பிறகு அந்தத் தோட்டத்தில் மலர்களால் ஆன திண்ணையில் அமர்ந்தாள். அப்பொழுது நாரத முனிவர் அங்கு வந்தார். பத்மாவதியும் எழுந்திருந்து முனிவருக்குப் பக்தியுடன் நமஸ்கரித்தாள். நாரதர் அவள் கையை நன்கு நோக்கி ஸ்ரீமந் நாராயணனே உனக்கு நாயகனாக வருவான் என்று சொல்லி அங்கிருந்து சென்று விட்டார்.

**ஸ்ரீநிவாஸர் வேட்டையாடுவது, பத்மாவதியைச் காண்பது**

அன்றைய தினமே திருமால் வேங்கடாசலம் விட்டு வேட்டையாடுவதற்குக் குதிரை மீது ஏறி வந்தார். காட்டிலும் மலைகளிலும் நன்கு சஞ்சாரம் செய்தார். அப்பொழுது ஒரு மதயானை பெருமாளை எதிர்த்து நின்றது. அதைச் சம்ஹாரம் செய்யவே ஸ்ரீஹரியும் அதன் பின் சென்றார். அது மலையிலிருந்து கீழே இறங்கி ஓட்டம் பிடித்தது. அரை காத தூரம் சென்றபின் அந்த யானை ஓடி பத்மாவதியிருக்கும் வனத்தையடைந்து பிளிறியது. அச்சப்தத்தைக் கேட்ட பத்மாவதியும், தோழிகளும் பீதியடைந்தார்கள். பத்மாவதியைத் தோழிகள் காப்பாற்ற முயன்றபொழுது ஸ்ரீநிவாஸப் பெருமாள் அமர்ந்து வந்த குதிரை அங்கு வந்து சேர்ந்தது. ஸ்ரீநிவாஸரைக் கண்டு பெண்கள் யாவரும் அஞ்சினார்கள். யானையும் ஓட முடியாது நின்று ஸ்ரீஹரியை தன் துதிக்கையால் வணங்கியது. ஸ்ரீநிவாஸர் அதனிடம் இரக்கங் கொண்டு உயிருடன் விட்டு விட்டார்.

பத்மாவதியும், அவள் தோழிமார்களையும் ஸ்ரீநிவாஸர் பார்த்து ஒரு புதருக்குள் நுழைந்து ஒளிந்து கொண்டார்.

யானையும் குதிரையும் பின்வந்த மனிதனும் காணாமல் போகவே பெண்கள் பலவாறு பேசிக் கொண்டிருந்தார்கள்.

பத்மாவதியும் அவர்கள் பேச்சைக் கேட்டு சிரித்து அவர்களுடன் சதுரங்கம் ஆடுவதற்கு முற்பட்டாள். ஸ்ரீநிவாஸர் புதருக்குள் இருந்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவளின் அழகு வடிவம் அவர் மனதை ஈர்த்தது. அவளை நோக்கி மெதுவாக நடந்தார். ஆவலுடன் அவளை நோக்கினார்.

ஸ்ரீநிவாஸரின் முகபாவத்தைக் கவனித்த பத்மாவதி தோழிகளோடு பரபுருஷர்கள் அரச குமாரிகள் இருக்குமிடத்திற்கு வரக்கூடாது என்று கூறி அவரை அனுப்பி விடுமாறு வேண்டினாள். அவர்களும் அவரை அங்கிருந்து செல்லும்படி வேண்டினார்கள்.

அப்பொழுது ஸ்ரீநிவாஸர் உங்கள் அரசகுமாரியோடு தனிமையில் பேச வேண்டுமென்று வந்தேன். நீங்கள் சென்று விடுங்கள், என்று கூறினார். பத்மாவதியும் அவருடைய குலம், கோத்திரங்கள், தாய்– தந்தையரின் பெயர், முதலான விவரங்களை அறிய வேண்டுமென்று தோழிகளுக்கு ஆணையிட்டாள். அவர்களும் ஸ்ரீநிவாஸரிடம் கேட்டார்கள்.

“எங்களுடையது சந்திர வமிசம், வசிஷ்ட கோத்திரம், தேவகி எனது தாய், வசுதேவர் எனது தந்தை, பலராமர் எனக்கு மூத்தவர். சுபத்திரை என் தங்கை” என்று ஸ்ரீநிவாஸர் தன்னைப் பற்றிய விவரங்களைக் கூறினார். பிறகு அரசகுமாரியின் குல–கோத்திரங்களைப் பற்றிக் கேட்டார்.

சந்திர வமிசத்தை சேர்ந்த ஆகாசராஜன் அவள் தந்தையென்றும், அவர் அத்ரி கோத்திரோத்பவர் என்றும்



சொன்னார்கள். ஸ்ரீநிவாஸர் ‘நான் அவளிடம் நட்பு கொள்ள விரும்புகிறேன். இதை அவளிடம் தெரிவித்து ஒப்புக் கொள்ளச் செய்வீர்களாக” என்று கேட்டுக் கொண்டார். அதைக் கேட்ட பத்மாவதி ரோஷமடைந்து “ஏ ! வேடனே நீ இங்கிருந்து போய் விடு” என்று ஸ்ரீனிவாஸரை அதட்டினாள். ஆனால் வேடன் அங்கிருந்து நகராமலிருப்பதை கவனித்த பத்மாவதி அவர் மீது சிறுகற்களை வீசினாள். அக்கற்களின் தாக்கத்தால் குதிரை கீழே வீழ்ந்தது. ஸ்ரீநிவாஸரும் வடக்குத் திசையை நோக்கி ஓடினார். மலையின் அடிவாரத்திலுள்ள புற்றுக்குள் நுழைந்தார்.

### பத்மாவதியின் பச்சாதாபம்

அங்கிருந்து பத்மாவதி தோழிகளுடன் வீட்டிற்குச் சென்று. மலர்ப்படுக்கையில் படுத்து வருந்தினாள். ஸ்ரீநிவாஸரும் பத்மாவதியின் பிரிவாற்றாமையால் வருத்தமடைந்தார். வகுளமாலிகை வந்து அவரோடு பேச நினைக்கும் போது அவர் மௌனம் சாதித்தார். அவர் மீதுள்ள கல்லடிகளைப் பார்த்து அவள் பயந்தாள். உடனடியாக அதற்குத் தக்கவாறு சிகிச்சையைச் செய்தாள். “என்ன நடந்தது?” என்று சொல்ல வேண்டுமென்று கெஞ்சினாள்.

இறுதியாக வகுளமாலிகை மீது இரக்கங் கொண்டு ஸ்ரீநிவாஸர் நடந்த யாவற்றையும் ஒன்று விடாமல் கூறினார். பத்மாவதியின் குலங்கோத்திரம் தாய் தந்தையர்களைப் பற்றியும் கூறினார். தனக்கு அவள் மீதுள்ள காதலை தெரிவித்தார். பத்மாவதியுடன் விவாகம் நடக்க முயற்சி செய்யுமாறு வகுளாவைக் கேட்டுக் கொண்டார்.

**வேதவதியின் வரலாறு**

வகுளமாலிகை “குழந்தாய் ! அழகு வடிவமான அவள் தாமரை மலரில் பிறப்பதற்கான காரணம் என்ன?” என்று கேட்டாள். அதற்கு அவளுக்கு ஸ்ரீநிவாஸர் இவ்வாறு பதிலளித்தார்.

“அம்மா ! திரேதாயுகத்தில் நான் தசரத மாமன்னருக்கு மகனானப் பிறந்தேன். ஜானகியைக் கைப்பற்றினேன். தந்தையின் ஆணைக்கு இணங்கி வனவாசம் சென்றேன். இராவணன் என்ற அரக்கன் சீதையை அபகரித்தான். அவள் “ராமா!” என்று அலறினாள்.

அந்த அலறலைக் கேட்டு அக்கினி பகவான் “இராவணா! இவள் சீதையல்ல. ராமபிரான் சீதையை என்னிடம் ஒப்படைத்துச் சென்றார். ஒரு பிராமண ஸ்த்ரீயை இங்கே விட்டு. சென்றார்” உன் நட்பை வேண்டி இந்த இரகசியத்தைச் சொன்னேன் என்று கூறி சீதா பிராட்டியின் வேடத்திலுள்ள வேதவதியைக் காண்பித்தார். உண்மையான சீதையை தன்னுள் ஒளித்துவைத்தார்.

மூர்க்கனான இராவணன் அக்னிதேவனின் பேச்சை நம்பினான். சீதையை விட்டு வேதவதியைக் கடத்திச் சென்று இலங்கையில் அசோகவனத்தில் சிறை வைத்தான். வேதவதிதான் இலங்கையில் அசோக வனத்திலிருந்தவள்.

நான் கடலைத் தாண்டி இலங்கைக்குச் சென்று இராவணனை சம்ஹாரம் செய்தேன். எல்லோருடைய பாராட்டைப் பெற வேண்டி “நீ அக்னியில் பிரவேசம் செய்தால் ஒழிய நான் உன்னை ஏற்றுக் கொள்ளமாட்டேன்.” என்று சீதையிடம் (வேதவதியிடம்) சொன்னேன். அவளும் அவ்வாறே



அக்னியில் பிரவேசம் செய்தாள். அப்போது அக்கினிதேவன் அதுவரை தனக்குள் ஒளித்து வைத்த சீதையை என்னிடம் ஒப்படைத்து விட்டு வேதவதியை தனக்குள் நிறுத்திக் கொண்டார்.

அப்பொழுது சீதை எனக்காகத் தவித்த வேதவதியை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறினாள். “இந்த ஜன்மத்தில் நான் ஏகபத்தினி விரதன். அடுத்த ஜன்மத்தில் இவளைப் பத்தினியாக கைப்பற்றுவேன். அதுவரை வேதவதி பிரம்மலோகத்தில் இருக்க வேண்டும். நானும் வேங்கடாத்திரியில் அவதரிக்கும் போது, இவள் (வேதவதி) இப்பூவுலகில் பிறப்பாள். அப்பொழுது நான் இவளை திருமணம் செய்து கொள்வேன்.” என்று நான் கூறினேன்.

இந்த ரகசியம் அக்கினிதேவனுக்கும் எனக்கும் தவிர மற்றவர்களுக்குத் தெரியாது. பிறகு துவாபரயுகத்தில் நான் வசுதேவரின் குமாரனாக ஜனித்தேன். அதன் பிறகு இந்தப் புற்றில் தோன்றினேன்.

இதைக் கேட்ட வகுளா வேதவதியின் முற்பிறப்பின் வரலாற்றைக் கூறுமாறு கேட்டாள். ஸ்ரீநிவாஸரும் கீழ்கண்டவாறு கூறினார்.

“வேதவதி முன்பு ஒரு பிராமண கன்னிகை. என்னைப் பதியாக அடைய நினைத்து தவம் பூண்டாள். இராவணன் அவள் மீது மோகம் கொண்டு கற்பழிக்க முயன்றான். நான் உன்னை ஹரியால் அழிக்கச் செய்வேன்” என்று இராவணனிடம் கூறி அக்கினியில் பிரவேசித்தாள். அக்னிதேவர் அவளைக் காப்பாற்றினார்.

இராவணன் சீதையை அபகரிப்பதற்கு வந்தபோது வேதவதியை சீதையாக மாற்றி இராவணனுக்கு அக்கினிதேவர் கொடுத்தார். சீதையை ஸ்வாஹா தேவியிடம் ஒப்படைத்தார். வேதவதியின் வாக்குப்படி என்னால் இராவணன் சம்ஹாரம் செய்யப்பட்டதால், அவளுடைய (வேதவதியின்) வேண்டுகோள் நிறைவேறியது.

அக்கினியிலுள்ள சீதையை என்னிடம் சேர்ப்பதில் அவள் முக்கிய பங்கு வகித்தாள். இராவணவதத்திற்குப் பிறகு பிரம்மலோகத்திற்குச் சென்று விட்டாள். அங்கு சிறிது காலம் தவம் செய்தாள். பிறகு தாமரை மலரில் பிரவேசித்து பத்மாவதியாக அவதரித்தாள்.

இப்படி பத்மாவதியின் வரலாற்றை ஸ்ரீநிவாஸர் வகுள மாலிகைக்குத் தெரிவித்தார். பத்மாவதியுடன் தனக்குத் திருமணம் நடத்தி வைக்கச் சொன்னார்.

அப்பொழுது வகுளா "இப்பொழுது பத்மாவதி உள்ள நகரம் எது? என்று கேட்டார் ஸ்ரீநிவாசர் "மாதாவே! வேங்கடாத்திரிக்கு அருகே கீழே உள்ளது. அமராவதியைப் போல் அழகாக இருக்கிறது. அதை நாராயணபுரம் என்பார்கள். ஆகாச ராஜன் அந்த நகரத்தை அறநெறி தவறாமல் ஆண்டு வருகிறான். அவன் இளைய சகோதரன் தொண்டைமானின் மகன் வசுதானன். தரணிதேவி பட்டமகரிஷி. அவளுடைய பெண் பத்மாவதி என்றும் ஆகாச ராஜனின் புகழையும் நாராயணபுரத்தின் சிறப்பையும், வர்ணித்தார். நாராயணபுரம் செல்லும் வழியையும் வகுளைக்குச் சொன்னார். நாராயணபுரத்திற்குச் சென்று பத்மாவதியைத் தன்னை மணக்கும்படி முயற்சி செய்யுமாறு கூறினார்.



பிறகு வகுள மாலிகை "உன்னுடைய ஜனன விருத்தாந்தத்தை அவர்கள் கேட்டால் நான் என்னவென்று சொல்வேன்" என்று கேட்டாள்.

"அம்மா ! சந்திர வம்சத்தை சேர்ந்த தேவகி – வசுதேவர்கள் என் தாய் – தந்தையர் என்று சொல்லுங்கள். பலராமன் அண்ணன் என்றும், சுபத்திரை என் தங்கை என்றும், நாங்கள் வசிஷ்ட கோத்திரத்தை சேர்ந்தவர்கள் என்றும் சொல்லுங்கள். என்னுடைய நட்சத்திரம் திருவோணம் (சிரவணம்). இளமையும் அழகும் உள்ள நான் பத்மாவதிக்கு எல்லாவிதத்திலும் தகுந்த வரன் என்று தெரிவியுங்கள்" என்று ஸ்ரீநிவாஸர் கூறினார்.

**வகுளமாலிகை நாராயணபுரம் செல்வது**

வகுள மாதாவும் மகிழ்ச்சியுடன் தெய்வ மாயை அமைத்த குதிரையில் ஏறி மலையை விட்டு இறங்கினாள். அங்குள்ள புண்ணிய நதிகளில் நீராடினாள். கபிலேஸ்வர சுவாமியை வணங்கினாள். நாராயணபுரம் சென்று அகஸ்தியர் கட்டிய கோவிலுள்ள சிவனையும் நமஸ்கரித்தாள்.

அந்த கோவிலிலுள்ள கன்னியர்களில் ஒருத்தியை அழைத்து அம்மா நீ யார் ? என்று கேட்டாள். அவள் நான் ஆகாசராஜனின் புத்திரி பத்மாவதியின் தோழி என்று கூறினாள்.

உன்னைப் பார்த்தால் ஏதோ வேதனையோடு இருப்பதாகத் தோன்றுகிறது. உன் முகம் ஏன் இப்படி சோகமாக உள்ளது ? என்று வகுளமாதா அந்தப் பெண்ணிடம் கேட்டாள். அவள் கீழ்கண்டவாறு கூறினாள்.

"அம்மா நான் என்ன வென்று சொல்வது ? நேற்றைய தினம் பத்மாவதி தேவியுடன் சேர்ந்து தோழிகள் எல்லோரும் வனத்தில் உலாவுவதற்குச் சென்றோம். அப்போது அங்கு ஒரு வேடன் வந்தான். அவன் மிகவும் அழகாக இருந்தான். குதிரை மீது வந்த

அவன் எங்கள் அரசகுமாரியிடம் ஏதோ சொல்ல நினைத்தான். ஆனால் இவளோ அவனைக்கோபித்து கற்களை வீசினாள். கற்களின் தாக்கத்தை தாங்காமல் குதிரை கீழே விழுந்தது. அவனும் வந்த வழியே சென்று விட்டான்.

பிறகு பத்மாவதி தன் அந்தப்புரத்திற்குச் சென்றாள். அந்த வேடவன் பார்வை அவள் மீது பட்டதோ என்னவோ? அவள் மிகவும் தாபத்திற்கு உள்ளானாள். அவளுடையப் பெற்றோர் வேதனைக்குள்ளானார்கள். பிருகஸ்பதியை அழைத்து அவளைக் காட்டினார்கள். அவள் தாபம் குறைய மருந்தை தருமாறு வேண்டினார்கள்.

மன்னா! இவளுக்கு எதுவும் ஆகாது. அஞ்ச வேண்டாம். ருத்திராபிஷேகம் செய்யுங்கள். நன்மையாக முடியும்" என்று பிருகஸ்பதி கூறினார்.

அரசர் ருத்திராபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அதற்கு வேண்டிய அந்தணரை இக்கோயிலுக்கு அனுப்பினார். நாங்கள் தேவையான பூ, பழவகைகளைக் கொண்டு வந்தோம். இத்தனைக்கும் நீயார்? இங்கு ஏன் வந்தாய்?" என்று வகுளாவைக் கேட்டாள்.

"பெண்ணே நான் வேங்கடவரின் பணிப்பெண். ஒரு வேலையாக இங்கு வந்தேன். அந்தப்புரம் சென்று தரணி தேவிக்கு ஒரு நல்ல செய்தியைக் கூறவேண்டும்." என்று பதில் கூறினாள்.

அந்தத் தோழி "ருத்திராபிஷேகம் முடியும் வரை இங்கேயே இரு. பிறகு நானே உன்னை அங்கு அழைத்துச் செல்வேன்" என்று கூறினாள். வகுளா அங்கேயே காத்திருந்தாள்.

ஸ்ரீநிவாசர் துணிவுள்ளவராய் இருப்பினும் பிரிவின் வேதனையால் மிகவும் துடித்துடித்தார்.

# மூன்றாம் அத்தியாயம்

## குறத்தியாக ஸ்ரீநிவாஸர்

வகுளமாலிகை வேங்கடாசலத்தை விட்டு இறங்கி வந்த பிறகு திருமாலுக்குப் பத்மாவதியைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் அதிகமாயிற்று. எவ்வாறாவது அவளைச் சந்திக்க நினைத்தார். தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொண்டு கிழிந்த ஆடைகளோடு குறத்தி வேடம் பூண்டு ஊர் ஊராகத் திரியும் கிழவி வடிவம் பூண்டார். பிரம்ம தேவனை ஏழு மாதக் குழந்தையாக முதுகில் கட்டிக் கொண்டார். கையில் ஒரு கோலைப் பற்றிக் கொண்டும், ஒரு கூடையை தலையில் வைத்துக் கொண்டும் நாராயணபுரம் சென்றார். அப்புரத்திலுள்ள தாய்மார்களைப் பார்த்து குறி சொல்லுகிறேன். வாருங்கள் என்று கூப்பிட்டவாறு திரிந்தார்.

சிலர் அவளிடம் சென்று குறி கேட்டார்கள். அரசியின் தோழிமார்கள் வந்து "உன் குறி எத்தகையது என்று தெரியப்படுத்து" என்றார்கள். அதற்கு "என்குறி மக்கள் அனைவருக்கும் சுபமளிப்பது, உண்மைஅறிய நினைப்பவர்களுக்கு மட்டுமே நான் குறி கூறுவேன். எல்லோருக்கும் சொல்ல மாட்டேன்" என்று குறத்தி வேடத்திலிருந்த பெருமாள் கூறினார்.

தோழிகள் தரணிதேவியிடம் சென்று குறத்தியின் விஷயத்தைத் தெரிவித்தார்கள். அவளை அங்கு அழைத்து வரச் சொல்லி அரசி கூறினார். அவர்கள் குறத்தியை வரும்படி அழைத்தார்கள். அவளும் அவர்கள் பின் சென்று தரணி தேவியின் இருப்பிடத்தை சென்றடைந்தாள். அரசி குறத்திக்கு

ஏற்ப மரியாதைகளைச் செய்தார். "உன் ஊர் எது ? உன் பெயர் என்ன ? உங்கள் வீடு எங்குள்ளது?'' என்று தரணிதேவி வினவினாள்.

"அம்மா ! எங்களைப் போன்றவருக்கு வீடு வாசல் கிடையாது தேசாந்திரிகளாகச் செல்லும் எங்களுக்கு ஒரு ஊரில் தங்கும் நிர்பந்தமில்லை. இந்த ஊரிலுள்ள மக்களுக்குக் குறி சொல்ல இங்கு வந்தேன்" என்று குறத்தி பதிலுரைத்தாள்.

**குறத்தி குறி சொல்லுதல்**

குறத்தி வேண்டியதால் ஒரு படியில் முத்துக்களைக் கொடுத்து இராணி குறி சொல்ல வேண்டினார். தேவதைகளை நினைத்து குறத்தி இவ்வாறு கூறினாள்: "தாயே ! உன் எண்ணங்கள் மிகச் சிறந்தவையே. உன் பெண்பிள்ளையைப் பற்றி நீ கேட்க இருக்கிறாய். உன் குழந்தை பூந்தோட்டத்தில் ஒரு கரிய நிறமுள்ளவனைப் பார்த்து காதல் கொண்டாள். அவன் பவளங்கள் ஜொலிக்கும் பொன்மலை மேல் உள்ளவன். அவன் மானிடன் அல்லன். ஸ்ரீமந் நாராயணன். அவனுக்கு உங்கள் பெண் மீதும் உங்கள் பெண்ணுக்கு அவன் மீதும் அன்பு உண்டானது. அவர்களுக்கு மணம் முடித்து வைத்தால் உங்கள் மகள் சுகமாக இருப்பாள்" என்று கூறினாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, வேங்கடேஸ்வர பெருமாள் அனுப்பிய ஒரு பெண் தூது வருவாள். என் சொல் பொய்யல்ல. இது முற்றிலும் உண்மை." என்றாள். இப்படி சொல்லி குறத்தி திடீரென்று எழுந்து சென்று விட்டாள். தன் நிஜ உருவத்தோடு வேங்கடாத்திரியைச் சென்றடைந்தார்.



குறத்தியின் பேச்சைக் கேட்டு தரணிதேவி ஆச்சரியப்பட்டு பத்மாவதியிடம் சென்று "அம்மா ! நீ ஏன் இப்படியிருக்கிறாய் ? உன் வேதனைக்குரிய காரணம் என்ன? நீ யாரோ ஒரு அழகனைப் பார்த்து காதல் கொண்டாயாமே ? இதனால் நமக்கு உலகத்தில் அவப்பெயர் வராதா ?" என்று கேட்டாள்.

அதற்கு பத்மாவதி "அம்மா ! உங்களுக்கு எந்த விதமான அவதூறும் வராது. கவலை வேண்டாம். நான் விரும்புபவன் மானிடனல்ல. அவன் புருஷோத்தமன் எல்லாம் அறிந்தவன்.. சர்வ சக்தி படைத்தவன். என் உள்ளம் அவனை நாடிச் சென்றது. இனிமேல் நடக்க வேண்டியவை, கண்டிப்பாக நடந்து விடும். உங்களுக்கு வேதனை வேண்டாம்" என்று கூறினாள்.

இதனிடையில் ருத்திராபிஷேகம் முடித்த பிராமணர்கள், பத்மாவதியின் தோழிகள், வகுளமாலிகை முதலியவர்கள் அங்கு வந்து சேர்ந்தார்கள். பிராமணர்கள் ருத்திராபிஷேக தீர்த்தத்தை பத்மாவதி மீது தெளித்தார்கள்.

**தரணிதேவியுடன் வகுளா உரையாடுதல்**

தரணி தேவி வகுளமாலிகையைத் தகுந்தவாறு உபசரித்தார். "எங்கிருந்து வந்தீர்கள்? நீங்கள் யார்?" என்று கேட்டாள்.

அப்பொழுது வகுளமாதா "அம்மா ! நான் சேஷாத்திரியிலிருந்து வந்துள்ளேன். ஸ்ரீவேங்கடேஸ்வர சுவாமிக்கு நான் தாசி. அவரின் ஆணைப்படி கல்யாண விஷயங்களைப் பேச வந்தேன்". உங்கள் மகளை அனைத்து நற்குணங்கள் உடைய வேங்கடேஸ்வர சுவாமிக்குக் கொடுத்து

விவாகம் செய்யுங்கள் என்று கூறினாள். அதற்கு தரணி தேவி "அம்மா ! மாதவனிடம் ரமாதேவி இருக்கிறாளே மீண்டும் எங்கள் பெண்ணை ஏன் விரும்புகிறார்?" என்று கேட்டாள்.

"அம்மா ! இப்பொழுது லட்சுமிதேவி ஸ்ரீஹரியிடமில்லை. அவள் கொல்லாபுரம் சென்று அங்குள்ள பக்தர்களைக் காப்பாற்றி வருகிறார். ஆகையால் மாதவன் உங்கள் மகளிடம் மனம் பறி கொடுத்தான். நீங்கள் அவர்களுக்கு மணம்முடிக்கச் சம்மதியுங்கள்" என்று வகுளமாதா கூறினார். லட்சுமிதேவி கொல்லாபுரம் சேர்ந்த விவரங்களைத் தெரிவித்தார். இராணியின் வாயிலாக விஷயத்தையறிந்த ஆகாசராஜன் மகிழ்ச்சியடைந்தான். வகுளாதேவி மீது அன்பு காட்டினான். வேங்கடேஸ்வரருக்கும் பத்மாவதிக்கும் மணம்முடிக்க அரசன் அங்கீகரித்தான். இந்த விஷயத்தை பத்மாவதிக்கும் தெரிய வைத்து அவளையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினான்.

அதன் பிறகு அரசன் பிருகஸ்பதியை தியானிக்கவே அவரும் அங்கு வந்து நடந்தவைகளை அறிந்து மகிழ்ச்சியடைந்தார். குருவின் ஆணைப்படி அரசன் ஊருக்கு மேற்கில் ஐந்து காத தூரத்தில் உள்ள சுகயோகியை வரவைத்தான். குரு சுகமகரிஷிக்கு எல்லாவற்றையும் தெரிவிக்கவே பத்மாவதி ஸ்ரீநிவாஸரின் பரிணயத்தை அவரும் மகிழ்ச்சியோடு சம்மதித்தார்.

**பத்மாவதி - ஸ்ரீநிவாஸரின் கல்யாண அழைப்பிதழ்**

பிறகு சுகமகரிஷியும் குருவும் வதூவரர்கள் இருவருக்குமுள்ள பொருத்தத்தைப் பார்த்தார்கள். கல்யாணத்திற்குத் தகுந்த லக்கினத்தை நிர்ணயித்தார்கள்.



லக்கினப் பத்திரிகையும் தயார் ஆயிற்று. குருவின் ஆலோசனைப்படி, சுகயோகி லக்கின பத்திரிகையை எடுத்துக் கொண்டு வேங்கட மலைக்குச் சென்று பத்திரிகையைத் தந்தார். அதைப் படித்து மகிழ்ந்த ஸ்ரீநிவாஸர் வைசாக சுக்ல தசமி, வெள்ளிக் கிழமை இரவில் வரும் சுப முகூர்த்தத்திற்குப் பந்து–மித்திராகள் சமேதராக நாங்கள் வருகின்றோம் என்று பதில் எழுதி சுகமகரிஷியிடம் கொடுத்தார். சுகயோகியும் நாராயணபுரம் சென்று அந்தக் கடிதத்தை ஆகாசராஜனிடம் கொடுத்தார். அரசரிடம் வெகுமதி பெற்று சுகமகரிஷி ஆசிரமத்துக்குச் சென்றார். பிருகஸ்பதியும் அமராவதி நகரம் சென்றார். தரணிதேவி வகுளாவிற்கு பட்டு வஸ்திரங்கள், ஆபரணங்கள் முதலியவற்றைக் கொடுத்து பாராட்டினார். வகுளமாதா அங்கிருந்து கிளம்பி சேஷாத்ரி வந்தடைந்து ஸ்ரீநிவாஸருக்கு நடந்த விஷயங்களையெல்லாம் தெரிவித்தார்.

அப்பொழுது ஸ்ரீநிவாஸர் வகுளாதேவியிடம் "கல்யாணத்திற்கு வேண்டிய வேலைகளை நன்றாகச் செய்து முடித்தாய். உன்னுடைய முயற்சி வெற்றி பெறும். ஆனால் கல்யாணத்திற்கு வேண்டிய பணத்தை எங்கிருந்து கொண்டு வருவாய் ? அது மிகவும் கடினமான செயல் ஆயிற்றே ?" என்று கேட்டார்.

வகுளா, "லட்சுமிதேவியை இங்கு வரவழைத்தால் உங்களுக்கு வேண்டிய பணம் கிடைக்குமல்லவா?" என்று வினவினாள். ஸ்ரீநிவாஸருக்கு அவள் பேச்சுப் பிடிக்கவில்லை. "நான் இங்கு இரண்டாவது கல்யாணத்திற்கு தயாராகியுள்ள

பொழுது, ரமாதேவி எனக்குப் பணம் கொடுப்பாளா? அவளிடம் பணம் கேட்பது சரியல்ல” என்று பதிலளித்தார்.

அதற்குப் பிறகு கல்யாணத்திற்கு வேண்டிய திரவியத்தை ஸ்ரீவராஹ மூர்த்தியிடம் கேட்கலாம் என்று வகுளா சொன்னாள். அதற்கு ஸ்ரீநிவாஸரும் ஒப்புக் கொண்டார். அவர் கட்டளையின்படி வராஹ சுவாமியிடம் சென்று விஷயத்தை சொல்லி திரவியத்தைக் கோரினாள். அதற்கு அவர் “ஸ்ரீநிவாஸனுக்கு எந்தவிதமான குறையுமில்லை. நீ கவலைப் படவேண்டாம். பிரம்மாதி தேவர்கள் இங்கே வந்து இந்தக் கல்யாணத்தை நடத்தி வைப்பார்கள்.” என்று சொன்னார். பிறகு வகுளா ஸ்ரீநிவாஸரிடம் சென்று ஸ்ரீவராஹ ஸ்வாமி கூறியதை தெரிவித்தாள்.

பிறகு ஸ்ரீநிவாஸர் ஆதிசேஷனையும், கருடனையும் நினைத்தார். உடனடியாக அவர்களும் வந்து ஸ்வாமியை வணங்கினார்கள். ஸ்ரீஹரி கல்யாணத்தைப் பற்றி அவர்களுக்குத் தெரிவித்து கருடன் மூலமாக பிரம்மதேவனுக்கும், ஆதிசேஷன் மூலமாக சிவ பெருமானுக்கும் கல்யாண சுபப்பத்திரிக்கையை அனுப்பினார்.

**பிரம்ம ருத்திராதிகளின் வருகை.**

பத்திரிகையைப் பார்த்தவுடன் பிரம்ம தேவர் திருமணத்திற்கு வரக்கூடிய அனைவருக்கும் இந்த விஷயத்தைத் தெரிவித்து அவர்களையும் வரச் சொன்னார். அவரும் சரஸ்வதி சமேதராக அன்னத்தின் மீது அமர்ந்து



வேங்கடாசலம் வந்து சேர்ந்தார். ஸ்ரீநிவாஸரும் பிரம்மதேவரை தகுந்தவாறு ஆதரித்து நடந்ததை விவரமாகக் கூறினார்.

ஆதிசேஷன் மூலமாக அழைப்பிதழைப் பெற்ற சிவ பெருமானும் பார்வதி சமேதராக ரிஷப வாகனத்தில் பூத கணங்கள் சேவித்துக் கொண்டிருக்க வேங்கடாத்ரியை வந்தடைந்தார். ஸ்ரீநிவாஸர் அவரையும் தக்கவாறு கௌரவித்து விஷயங்களைத் தெரிவித்தார்.

அவர்களோடு இந்திராதி தேவர்களும் தங்கள் பரிவாரத்தோடு அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களையும் தகுந்தவாறு உபசரிக்க அவர்கள்தங்கள் ஆசனத்தில் அமர்ந்தார்கள். ஸ்ரீஹரி வந்தவர்களுக்கெல்லாம் தன்னுடைய திருமண விஷயத்தை விளக்கினார். எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

இநதிரனின் யானை மீதமர்ந்து வந்து விஸ்வகர்மா நாராயணபுரத்தில் மரகதமணிகளோடு தோரணங்களை அமைத்து, ஒரு சுவர்ண மண்டபத்தை அமைத்தார். வகுளாதேவி எல்லோரையும் ஈடுபடுத்தி கல்யாணத்திற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தார்.

பிரம்மதேவன் ஸ்ரீநிவாஸரை அப்யங்கன ஸ்நானம் செய்ய அழைத்தார். ஆனால் ஸ்ரீநிவாஸப் பெருமாளோ கவலையோடு, “பிரம்மதேவரே! லட்சுமிதேவி கொல்லாபுரத்தில் இருக்கிறாள். அவளில்லாமல் அப்யங்கன ஸ்நானம் செய்வதற்கு எனக்கு இஷ்டமில்லை. அவள் இல்லாமல் இந்த திருமணத்தில் எனக்கு விருப்பமில்லை” என்று கூறி வேதனை அடைந்தார்.

ஆகையால், லட்சுமியை திருமணத்திற்கு அழைப்பதே தனது கடமை என்று நினைத்து, அவளை அழைத்துக் கொண்டு வர சூரியனை அனுப்பினார்.

### லட்சுமி தேவியின் வருகை

சூரிய தேவன் உடனடியாக கொல்லாபுரம் சேர்ந்து "அம்மா! திருமால் சக்தியற்றவராய் மிகுந்த பரிதாபமான நிலையில் உள்ளார். சேஷாசலத்திலுள்ள அவர் உன்னைக் காண வேண்டுமென்று நினைக்கிறார்" என்று லட்சுமிதேவியிடம் கூறினார்.

அதைக் கேட்ட லட்சுமியும் உடனடியாக ரதத்தில் ஆகாச மார்க்கமாக சேஷாசலம் வந்தடைந்தார். அங்குள்ள தேவதைகள் எல்லோரும் அவளை வணங்கினார்கள். ஸ்ரீநிவாஸரும் அவளை கௌரவித்தார். ரகசியமாக அவளிடம் சொல்ல வேண்டிய விஷயங்கள் சிலவற்றைச் சொன்னார். வைகுண்டத்தை விட்ட நாள் முதல் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் விளக்கி பத்மாவதியை மணக்க அவள் அங்கீகாரத்தைக் கேட்டார். அவள் சம்மதிக்கவில்லையெனில் இந்தத் திருமணம் வேண்டாம் என்று கூறினார்.

விவரங்களைக் கேட்ட இந்திரா தேவியும் ஸ்ரீநிவாஸரின் திருமணத்திற்குச் சம்மதித்தாள். பிறகு வரனுக்கு அப்பியங்கனம் முதலிய மங்கள காரியங்கள் நடைபெற்றன. லட்சுமி தேவியும் அப்யங்கன ஸ்நானம் செய்தாள்.



வைகாநஸ சூத்திர விதிகளின் படி புண்ணியாஹவாசகம் முதலிய காரியங்கள் நடந்தன. ஸ்ரீநிவாஸர் தன் குல தெய்வமான ஸமீ விருட்சத்திற்குப் பிரதட்சணம் செய்து வணங்கி பூசித்தார். பிறகு ஸ்ரீநிவாஸர் வராஹ ஸ்வாமியை பூதேவி சமேதராக தன் திருமணத்திற்கு வருமாறு அழைத்தார். அவர் தனக்குப் பதிலாக வகுளா தேவி வருவாள் என்று சொல்லி அனுப்பினார்.

### கடன் பத்திரம்

திருமணத்திற்கு வேண்டிய திரவியத்தை லட்சுமி தேவியிடம் கேட்பது சரியில்லையென்று ஸ்ரீநிவாஸர் நினைத்தார். ஆகையால் குபேரனை அழைத்து திருமணத்திற்குத் தேவையான பணத்தைத் தருமாறு கேட்டார்.

"நான் கடன் பத்திரத்தை எழுதி தருகிறேன். வருடந்தோறும் கண்டிப்பாக அதற்குரிய வட்டியைக் கட்டிவிடுவேன். கலியுகம் முடியும் போது அசலையும் கட்டி விடுகிறேன். இதற்கு பிரம்மதேவரும், சிவபெருமானும் சாட்சியாக இருப்பார்கள்" என்று கூறினார். "எனக்கு வட்டி வேண்டாம். உங்களுக்கு வேண்டிய பணம் தருகிறேன்". என்று குபேரன் கூறவே "நான் தானமாக உன்னிடமிருந்து பணத்தை வாங்கமாட்டேன். வட்டியையும் செலுத்துகிறேன்." என்று ஸ்ரீநிவாஸர் பதில் கூறினார்.

அதற்குப் பிறகு, பிரம்மதேவர் சிவபெருமான் முதலியவரிடம் "நான் கலியுகம் முடியும்வரையில் இந்த மலையில் குடியிருந்து பக்த கோடிகளுக்கு அருள் புரிவேன். அவர்களிடமிருந்து வேண்டிய பணத்தைப் பெற்று குபேரனின்

பணத்தை திருப்பித் தந்து விடுவேன். நீங்கள் இருவரும், மற்றும் இங்குள்ள அரசமரமும் இதற்கு சாட்சிகள்" என்று கூறி இவ்வாறு பத்திரத்தை எழுதி குபேரனிடம் கொடுத்தார். குபேரனும் 14 இலட்ச வராகன்களைக் கடனாகக் கொடுத்தார். பிறகு திருமணத்திற்கு வந்த எல்லோருக்கும் சுவையான விருந்து உணவுகளை அளித்தார். பொழுது சாய்ந்தது. சூரியன் தன் வெளிச்சத்தைத் தரும் வேலையை சந்திரனுக்கு அளித்து மேற்கு மலையை நோக்கிச் சென்றார். பிறகு சந்திரன் தோன்றி உலகத்திற்குக் குளிர்ச்சியை உண்டாக்கினான். இரவு முடிந்து சூரியன் கிழக்கே உதித்தான். திருமணத்திற்கு வந்த எல்லோரும் புஷ்கரணியில் ஸ்நானம் செய்து சந்தியாதி விதிகளை முறைப்படி செய்தார்கள். பிறகு மங்கள வாத்தியங்கள் முழங்க அவரவர்களின் வாகனத்திலமர்ந்து சேஷாசலத்தில் இறங்கி, கபில தீர்த்தம் வழியாகப் பயணம் செய்தார்கள். சுகயோகியின் ஆசிரமத்தின் வழியாக நவமி திதியன்று மாலைநேரம் நாராயணபுரம் வந்தடைந்தார்கள்.

ஆகாசராஜனும் அவர்களுடைய வாழ்த்துக்களை வேண்டி தகுந்தவாறு வெகுமதிகள் கொடுத்தார். திருமணம் சம்பந்தப்பட்ட நவகிரஹ யாகங்கள் சாஸ்திர முறைப்படி நடந்தேறின. திருமணத்திற்கு வந்தவர்கள் அன்று இரவு விடுதியில் சுகமாக ஓய்வு எடுத்துக் கொண்டார்கள்.

மறுநாள் சூர்யோதயத்திற்குப் பிறகு எல்லோரும் நீராடினார்கள். சிலர் உபவாச நியமத்தை பின்பற்றினார்கள். சாயங்காலம் ஆகாசராஜனும் தரணிதேவியோடு சேர்ந்து



ஸ்ரீநிவாஸரின் நண்பர்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று சம்பிரதாய முறைப்படி மரியாதைச் செய்தார்கள்.

**பத்மாவதி ஸ்ரீநிவாஸரின் திருமணம்**

ஸ்ரீநிவாஸர் லட்சுமி சமேதராக ஐராவதத்தின் மீது ஏறி மங்கள வாத்தியங்கள் முழங்க, பிரம்மாதி தேவர்கள் தங்களை அனுக்கிரஹிக்க நகரத்திற்குள் பிரவேசித்தார்கள். அரசனும் திருமண மண்டபத்தின் அருகில் நின்றான். மங்கள வாத்தியங்கள் முழங்க தொண்டைமானின் பட்டமஹிஷியும் சுமங்கலிகளும் வந்து சந்தோஷமாக ஸ்ரீஹரிக்கும் லட்சுமிதேவிக்கும் மங்கள ஆரத்தியை எடுத்தார்கள்.

ஆரத்தி எடுத்தவர்களுக்கு ஸ்ரீநிவாஸர் குபேரன் மூலம் பட்டு வஸ்திரங்களும், தட்சிணைகளும் கொடுத்தார். பிறகு அந்தப்புரம் சென்று லட்சுமிதேவி சமேதராக சுவர்ண சிம்மாஸனத்தை அலங்கரித்தார். அனசூயை முதலான சுமங்கலிகள் திருமணப் பெண்ணான பத்மாவதியைத் தக்கவாறு அலங்காரம் செய்தார்கள். பத்மாவதியும் கௌரி பூஜை செய்தாள். தரணிதேவி சுமங்கலிகளோடு பத்மாவதி வீற்றிருந்த திருமண மண்டபத்தை வந்தடைந்தார்கள்.

வஸிஷ்ட முனிவர் திருமணச் சடங்குகளை செய்தார். பொன், மணி, ரத்தினங்களோடு அலங்கரிக்கப்பட்ட பத்மாவதியை ஆகாச ராஜன் ஸ்ரீநிவாஸருக்குக் கன்னியாதானம் செய்து கொடுத்தார். கங்கணம், மாங்கல்ய தாரணம், ஹோமம், சப்தபதி, அருந்ததி பார்த்தல் முதலிய விவாஹ விதிகள் சரிவர

நடந்தேறியது. அங்கு வந்திருந்த மக்கள் யாவருக்கும் தட்சிணை– தாம்பூலங்கள் கொடுத்து கௌரவித்தார்கள்.

இப்படி பத்மாவதி ஸ்ரீநிவாஸரின் திருமணம் நாராயணபுரத்தில் ஆகாசராஜனின் இல்லத்தில் மிக வைபவமாக நடந்தேறியது. மறுநாள் சூரியோதயத்தில் ஸ்ரீஹரி பத்மாவதியை தன்னுடன் அனுப்ப வேண்டும் என்று ஆகாசராஜனைக் கேட்டார். அரசரும் நீங்கள் ஒரு மாத காலமாவது இங்குத் தங்க வேண்டுமென்று கூறினார். “இல்லை, எனக்கு அங்கு வேலைகள் உள்ளன. இப்போது இங்கே தங்க முடியாது” என்று ஸ்ரீநிவாஸர் கூறினார். லட்சுமிதேவி பத்மாவதியை ஸ்ரீநிவாஸரோடு அனுப்ப வேண்டுமென்றும், அங்குள்ள வகுளமாலிகை, தாயைப் போல அவளைப் பார்த்துக் கொள்வாள் என்றும் கூறினாள். அரசனும் மகளுக்கும் மருமகனுக்கும் வஸ்திரங்களைச் சமர்ப்பித்தான். தன் பெண்ணை அன்போடு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொண்டே கண் கலங்கினான். ‘மன்னரே! உங்கள் பெண்ணிற்காக நீங்கள் வருத்தப்பட வேண்டாம்’ என்று கூறி ஸ்ரீநிவாஸர் பத்மாவதியுடன் சேர்ந்து கருடாரூடராக வேங்கடாசலம் வந்து சேர்ந்தார்.

பிரம்மாதி தேவர்கள் படை சூழ ஸ்ரீநிவாஸர் அகஸ்திய ஆசிரமத்தைச் சேர்ந்து அங்கு அந்த நாளைக் கழித்தார். மறுநாள் பிரம்மாதி தேவர்கள் ஸ்ரீநிவாஸரின் அனுமதியோடு தங்கள் வாசத்திற்குச் சென்றார்கள். லட்சுமிதேவி ஸ்ரீஹரியை ஒருவிதமாகச் சம்மதிக்கச் செய்து பிறகு கொல்லாபுரம் சென்றார்.



**அகஸ்திய ஆசிரமத்தில் வாசம்**

பிறகு ஸ்ரீநிவாஸர் அகஸ்திய முனிவரிடம், “முனிவரே! நாங்கள் வேங்கடாசலத்திற்குச் செல்கிறோம்” என்று கூறினார். அகஸ்தியர் ஸ்ரீநிவாஸரிடம் “ஸ்ரீநிவாஸா! மணமுடித்தவர்கள் ஆறு மாதங்கள் வரை திருவேங்கடத்திற்குச் செல்வது உசிதமில்லை. அதுவரை நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும் என்று சொன்னார். அதற்குச் சம்மதித்த ஸ்ரீநிவாஸரும் சதி சமேதராக ஆறு மாதங்கள் வரை அகஸ்தியர் ஆஸ்ரமத்தில் தங்கியிருந்தார்.

பத்மாவதி ஸ்ரீநிவாஸரின் திருமணம் நடந்த சில தினங்களில் ஆகாசராஜன் பரமபதமடைந்தான். வசுதானன் தந்தைக்குச் செய்யவேண்டிய ஈமக் கிரியைகளைச் செய்தான். இதைக் கேட்ட ஸ்ரீநிவாஸர் அகஸ்திய ஆசிரமத்தை விட்டு நாராயணபுரத்திற்குச் சென்று வசுதானனிடமும் தொண்டைமானிடமும் துக்கம் விசாரித்து அவர்களுக்கு ஆறுதல் கூறினார். மீண்டும் ஆசிரமத்திற்கு வந்து தந்தையை நினைத்துக் கொண்டு வருத்தமடைந்த பத்மாவதிக்கும் ஆறுதல் கூறினார்.

இதுவரை ஸ்ரீநிவாஸரின் வரலாற்றைக் கேட்ட சௌனகாதி முனிவர்கள், “ஆகாசராஜன் மரணமடைந்த பிறகு அவரின் புத்திரன் வசுதானன், தம்பி தொண்டைமான் – இவர்கள் இருவரில் யார் அரசை ஆண்டார்கள்?” என்று சூதமகரிஷியைக் கேட்டார்கள். அவர் இவ்வாறு பதிலுரைத்தார்.

**வசுதானன், தொண்டைமானின் போர்**

முனிவர்களே ! ஆகாசராஜனுக்குப் பிறகு அரசு தனக்கேயுரியது, என்று தொண்டைமானும், வசுதானன்

தனக்கேயுரியது என்று விவாதம் புரிந்தபோது, இருவருக்குள் கலகம் ஏற்பட்டது. போரில் யார் ஜெயிக்கிறார்களோ அவர்களுக்கே அரசபதவி என்று இருவரும் போருக்கு ஆயத்தமானார்கள். வசுதானனும் அதற்குச் சரியென்றான்.

ஸ்ரீநிவாஸருக்கு பரமபக்தன் ஆன தொண்டைமான் அவரிடம் சென்று தனக்கும் தன் அண்ணன் மகனுடன் ஏற்பட்ட விவாதம் பற்றிக் கூறினான். போரில் தனக்கு உதவி புரிய வேண்டும் என்று கேட்டான்.

"நான் தொண்டைமானுக்குப் போரில் உதவி செய்தால் பத்மாவதி கோபித்துக் கொள்வாள். வசுதானனுக்கு உதவி புரிந்தால் அவள் மகிழ்ச்சியடைவாள். ஆனால் தொண்டைமான் எனக்குப் பரம பக்தன். இவ்விஷயத்தில் இவ்விருவருக்குள் யாரையும் நிராகரிக்க இயலாது. இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும்" என்று வேதனைக்குள்ளானார்.

பிறகு போரில் தொண்டைமானுக்கு வெற்றி கிடைக்குமென்று, அவனுக்கு ரகசியமாகக் கூறி அவனுக்கு உதவ தன்னுடைய சக்கிராயுதத்தை கொடுத்தனுப்பினார்.

அதன் பிறகு வசுதானனனும் உதவி வேண்டி வந்தான். அவன் கேட்டபடி ஸ்ரீநிவாஸர் அவனோடு சேர்ந்து நாராயணபுரத்திற்குச் சென்றார். அங்கு மைத்துனனுடன் சேர்ந்து யுத்த பேரிகையை முழங்க வைத்தார்.

இருபுறமும் போர் தீவிரமாக நடைபெற்றது. அச்சமயத்தில் தொண்டைமான் ஸ்ரீஹரி கொடுத்த சக்கிராயுதத்தை வசுதானன் மீது எய்தான். ஸ்ரீநிவாஸர் அந்த சக்ராயுதத்தை எதிர்த்து நிற்கவே,



அது ஸ்வாமி மீது பட்டு மூர்ச்சையாகி அவர் ரதத்தின் மீது சாய்ந்து விட்டார்.

அப்பொழுது தொண்டைமானும், வசுதானனும் சண்டையை நிறுத்தி விட்டு ஸ்ரீநிவாஸரை உபசரிக்கச் சென்றார்கள். பிறகு ஸ்ரீநிவாஸர் மூர்ச்சைத் தெளிந்து உட்கார்ந்தார். தொண்டைமான் அவரை நமஸ்கரித்து இவ்வாறு கூறினான்: "நான் பிரயோகம் செய்த சக்கிரத்தினால் நீங்கள் மயக்கமடைந்தீர்கள். உமக்கு அபசாரம் செய்த பாவம் என்னை சுற்றிக் கொண்டது. இதற்குப் பரிகாரமாக நான் காசிக்குச் செல்கிறேன். அதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும். நாட்டை வசுதானனுக்கே கொடுத்து விடுங்கள் இந்த நாடு எனக்கு தேவையில்லை. இந்த வைராக்கியத்தை அருள் புரிவீராக ! என்று வேண்டினான்" அப்பொழுது ஸ்ரீஹரி வசுதானனை நோக்கி "உன் அபிப்பிராயம் என்னவென்று கேட்டான். அதற்கு வசுதானன், "ஹரி ! என்னை காப்பாற்றுவதற்காக நீங்கள் குறுக்கிட்டு சக்கரத்தில் அடிப்பட்டீர்கள். அந்தப் பாவம் என்னைச் சேர்ந்ததே. அதன் பரிஹாரமாக நான் ராமேஸ்வரத்திற்குச் செல்கிறேன். இந்த ராஜ்யத்தை என் சித்தாப்பாவிற்கே கொடுத்து விடுங்கள்" என்று கூறினான். அதைக் கேட்ட ஸ்ரீநிவாஸர் சுகமகரிஷியை அழைத்து நடந்ததை விவரித்து இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார். இவர்கள் காசி, ராமேஸ்வரம் செல்ல வேண்டாம். ஆகாசராஜனுடைய பாகத்தை வசுதானனனுக்கும், மிகுதியை தொண்டைமானுக்கும் கொடுப்பது சரி என்று சுகமகரிஷி தீர்ப்பளித்தார்.

ஸ்ரீநிவாஸர் அந்த யோகியின் சொற்படி நாட்டைப் பிரித்து அவர்கள் இருவருக்கும் அளித்தார். அவர்களும் அதற்கு ஒப்புக் கொண்டார்கள். ஸ்ரீநிவாஸரும் தம் இருப்பிடத்திற்குச் சென்றார்.

பாதி ராஜ்ஜியத்தைப் பெற்ற தொண்டைமான் போகத்தை விட்டு வாசுதேவன் மீது பக்தியை வளர்த்துக் கொண்டான். மானிட உருவத்திலுள்ளவர் நாராயணனனே என்ற உண்மையை அறிந்தான்.

**விஸ்வரூபம்**

அகஸ்தியர் ஆசிரமத்திற்குத் தொண்டைமான் ஒரு நாள் வந்து அவ்விடத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தான். அவன் பக்திக்கு மகிழ்ந்து எம்பெருமான் அவனுக்கு அற்புதமான தன் விஸ்வரூபத்தைக் காண்பித்தார். அதைப் பார்த்த தொண்டைமான் மெய் சிலிர்க்க திருமாலின் திவ்வியரூபத்தைப் பலவிதமாக போற்றினான்.

**தேவாலய அமைப்பு**

பிறகு ஸ்ரீநிவாஸர் அவனைப் பார்த்து வேங்கடாத்ரியில் தனக்கொரு பொன்மயமான மணிமண்டபம் போன்ற தேவாலயம் ஏற்பாடு செய்ய வேண்டினார். முற்பிறவியில் தொண்டைமான் ஸ்ரீரங்கதாஸன் என்ற பெயரில் திருமால் மீது பக்தி கொண்டு பகவத் கைங்கர்யம் செய்து வந்த வரலாற்றை ஸ்ரீஹரி அவனுக்குத் தெரிவித்தார். அதற்கு ஆச்சரியப்பட்டு அந்த அரசன் விஸ்வகர்மாவை அழைத்து அவனோடு வேங்கடாசலம் சென்றார். அங்குள்ள சிற்பக்கலை முறைப்படி மூன்று



பிராகாரங்களையும், ஏழு துவாரங்களையும் ஆஸ்தான மண்டபம், முகமண்டபம், கோசாலை, தான்யசாலை, மடைப்பள்ளி ஆகிய கட்டிடங்களை தகுந்த வசதிகளோடு விஸ்வகர்மாவினால் அமைக்கச் செய்தார். கட்டமைப்பு முடிவடைந்தவுடன் மலை இறங்கி திருமாலை நோக்கி “உங்கள் விருப்பப்படி தேவாலயம் தயாராயிற்று. சதிபதியாக அங்கு எழுந்தருள வேண்டும் என்றும், நான் உங்கள் தாசனாக சேவைகள் செய்கிறேன்” என்று தெரிவித்தான்.

**ஆனந்த நிலைய பிரவேசம்**

வேங்கடவர் பிரம்மா, சுகர், அகஸ்தியர் பின் தொடர பத்மாவதியோடு மலையில் எழுந்தருளினார். மங்கள ஓசை முழங்க விக்ருதி வருஷத்தில் அசுவனி நட்சத்திரம் வியாழனன்று வேத மந்திரங்கள் முழங்க காரியங்கள் பூர்த்தி செய்து ஆனந்த நிலையத்தில் பிரவேசித்தார். பிரம்மாதி தேவர்கள் பூமழை பொழிந்து ஸ்ரீநிவாஸரைத் துதித்தார்கள்.

வைகாநஸ அர்ச்சகர்கள் துவாரபாலகர்களைத் துவாரத்தில் நிறுத்தி விதிமுறைப்படி ஹரியை அர்ச்சித்தார்கள். இறைவனும் பத்ம பீடத்தின் மீது பாதங்களை ஊன்றி நின்றார். இடுப்புபாகத்தின் மீது இடது கையை வைத்தார். வலது புறத்தில் வலது பாதங்களை காட்டும்படி நின்றார். பிரம்மாதிதேவர்கள் இதுவே பரமபதம் என்று கூறினார்கள்.

பிரம்மதேவன் இறைவன் சந்நிதியில் இரண்டு அகண்ட தீபங்களை ஏற்றி, “கலியுகம் இருக்கும் வரையில் இந்த விளக்குகள் இருக்கும். இவ்விளக்குகள் இருக்கும் வரை

திவ்விய விமானம் இருக்கும். கலியுகத்தில் இந்த தீபங்கள் மறைந்து விடும். விமானம் தரை மட்டமாகி விடும். அப்பொழுது வேங்கடேஸ்வரர் ஸ்ரீவைகுண்டத்தை அடைவார். பிறகு கிருதயுகம் ஆரம்பமாகும். மூன்று யுகங்கள் வைகுண்டத்தில் வாசம் செய்த இறைவன் மீண்டும் கலியுகத்தில் சேஷாத்திரியை வந்தடைவார்" என்று தெரிவித்தார்.

பிறகு பிரம்மதேவனிடம் ஸ்ரீநிவாஸர் "பிரம்மதேவரே ! எனக்கு அங்கு ரதோத்ஸ்வத்தை நடத்துவீராக !" என்று ஆணையிட்டார். உடனடியாக பிரம்மதேவரும் தொண்டைமானின் வாயிலாக வைகாநஸ ஆகம விதிப்படி அங்குரார்ப்பணம், துவஜாரோஹணம், பல்வேறு வாகன சேவைகள் ரதோத்ஸவம் தீர்த்தவாரி முதலிய தெய்வத் திருவிழாக்கள் நிகழ வைத்தார். பல்வேறு நைவேத்தியங்களைச் சமர்ப்பித்து "சர்வம் ஸ்ரீநிவாஸார்ப்பணம்" என்று கூறினார். வேங்கடேஸ்வர சுவாமியும் மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

பிறகு பிரம்மதேவர் இந்திராதி தேவர்களை அவரவர் லோகத்திற்கு அனுப்பி விட்டு அவரும் சத்தியலோகம் அடைந்தார். தொண்டைமானும் நன்கு அரசாட்சி செய்து ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு எல்லா உற்சவங்களும் நடத்தினார். தினந்தோறும், அங்கு சென்று பொற்கமலங்களால் ஸ்ரீநிவாஸரை அர்ச்சித்தார்.

**பீமனுக்கு மோட்சம் அருளுதல்**

இப்படி நடக்கும் காலத்தில் ஒரு குயவன், தன் வீட்டிலிருந்து வேங்கடேஸ்வர ஸ்வாமியிடம் பக்தியுடன், மரத்தினால் செய்த



அர்ச்சா மூர்த்திக்கு மண் மலர்களோடு தினந்தோறும் பூஜைகளைச் செய்து வந்தான். அந்த மலர்களும் ஸ்ரீநிவாஸர் சந்நிதியை அடைந்து வந்தன. அவற்றைத் தொண்டைமான் மன்னனுடைய கண்ணில் படாதவாறு ஸ்ரீஹரி தன்னுள் ஒளித்து வைத்தார்.

அரசன் பொன் மலர்களால் திருவாராதனம் செய்த பூஜா விதிகளை அகங்காரம் நிரம்பியதாக இறைவன் நினைத்தார். ஒரு நாள் அரசன் பூஜை செய்யும் சமயத்தில் அவனுக்கு மண்மலர்களை இறைவன் காட்டினார். "இம்மண் மலர்கள் எங்கிருந்து வந்தன ? நான் சமர்ப்பிக்கும் பொன் மலர்களைத் தள்ளி விட்டு இவ்விடத்தில் மண் மலர்களை வைத்தவர் யார் ? என்று அரசன் ஸ்ரீநிவாஸரிடம் வினவினான்.

அப்பொழுது இறைவன் இங்கிருந்து இரண்டரை மைல் தூரத்தில் குருவகம் என்ற கிராமம் உள்ளது. அங்கு பீமன் என்ற குயவன் இருக்கிறான். அவன் மிகவும் ஏழை. தினமும் பானைகளைச் செய்து தன் வாழ்க்கையை நடத்துபவன். அவன் பானைகளைச் செய்யும் காலத்தில் தன் இரண்டு கைகளிலும் ஒட்டிய மண்ணை பூவாகச் செய்து தான் பிரதிஷ்டை செய்துள்ள மரமூர்த்திக்குச் சமர்ப்பிப்பான். தினந்தோறும் இவ்வாறு அவன் செய்து வருகிறான். அதைக் கேட்ட அரசன் ஆச்சரியப்பட்டான். விரைவாகத் தன் பூஜைகளை முடித்துக் கொண்டு பீமன் இருக்குமிடத்திற்குச் சென்றான். அவன் அரசனைப் பார்த்து பயத்தோடு, "பிரபு! "தாங்கள் இங்கு வருவதற்கான காரணமென்ன ? ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றான். அதற்கு

அரசன் "பீமா! உன் பக்தியை இறைவன் மிகவும் மெச்சினார். அதிலுள்ள உள் நோக்கத்தை எனக்குக் கூறு" என்று கேட்டான்.

குயவன் இவ்வாறு பதிலுரைத்தான்: "மகாராஜா! நான் ஒரு நாலாம் வருணத்தவன். அறிவற்றவன். விஷ்ணு பக்தியைப் பற்றி நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை."

அப்பொழுது கருட வாகனத்தில் ஸ்ரீநிவாஸர் அங்கு வந்து சேர்ந்தார். பீமனைப் பார்த்து "புண்ணிய புருஷா ! இங்கே வா. இன்று நான் உனக்கு மோட்சம் அளிக்கப் போகிறேன்." என்று அருள் புரிந்தார். அதைக் கேட்ட பீமன் தன் மனைவியோடு ஸ்வாமியை நமஸ்கரித்து மோட்சத்தை அடைந்தான்.

அப்பொழுது அரசன் ஸ்வாமியிடம் "ஓ! கமலாட்சா! நான் உன் பக்தனான பீமனோடு உரையாடிச் கொண்டிருக்கையில், நீ அவனுக்கு மோட்சத்தை அளித்தாய். இவ்வாறு எனக்கு நீ எப்பொழுது அருளுவாய்" எனக் கேட்டான்.

ஸ்ரீஹரி புன்னகையுடன் "பீமனின் பக்தி சாத்வீகமானது. அதை ஏற்றுக் கொண்டு நான் அவனுக்குப் பரமபதம் அளித்தேன். இதற்கு முன்பே அவன் என்னிடம் மோட்சத்தைக் கேட்டிருந்தான். உன் பூஜையை மற்றவர்கள் அறிந்து, உன் வீட்டிற்கு மன்னன் வரும் பொழுது உனக்கும், உன் மனைவிக்கும் மோட்சம் அளிப்பேன்" என்று கூறியிருந்தேன் என்றார்.

பிறகு அரசனிடம் நீ இதற்காக வருந்த வேண்டாம். உன் மகனுக்கு பட்டாபிஷேகம் செய்து விடு. பக்தி ஞானம், வைராக்கியம், இவைகளைப் பெற்று ஏகாந்தமாக என்னைத் தியானம் செய்து வருவாயாக ! அப்பொழுது நான் உனக்குப் பரமபதத்தை அளிப்பேன்!" என்று கூறினார். தொண்டைமானும் தன் இருப்பிடத்திற்குச் சென்றான். தன் மகன் ஸ்ரீநிவாஸனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தான். ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் பாதாரவிந்தங்களைச் சேவித்து தினந்தோறும் உற்சவங்கள் நடத்தினான். பக்தி–ஞானங்களை வளர்த்துக் கொண்டான். விரக்தி மனப்பான்மையை மேற் கொண்டான். பெருமாளை ஏகாந்தமாக தியானித்தான்.



### தொண்டைமான் சாரூப்யம் அடைதல்

சிறிது காலத்திற்குப் பிறகு ஸ்ரீஹரி கருணையுடன் அவனிடம் சென்றார். அரசனும் பக்தி சிரத்தையுடன் ஸ்ரீஹரியை துதித்தான். ஸ்வாமியும் அவனை அனுக்ரஹித்து "அரசரே ! நீ இப்பொழுதே பக்தியில் சிரேஷ்டனாகி விட்டாய். உனக்கு நிச்சயமாக முக்தியளிக்கிறேன். உனக்கு இப்பொழுதே முக்தி வேண்டுமா?" என்று கேட்டார். அரசனும் தனக்கு உடனடியாக மோட்க்ஷம் கிட்ட வேண்டும் என்று பிரார்த்தித்து, சரணாகதியடைந்தான். இறைவனும் அதனை அனுக்கிரஹித்தார். ஓர் திவ்விய விமானம் ஆகாயத்திலிருந்து கீழே இறங்கியது. தொண்டைமான் மன்னனை புஷ்பக விமானத்தில் ஏற்றி அவனுக்கு சாரூப்யத்தை பிரசாதித்து வைகுண்டத்திற்கு பெருமாள் அனுப்பி வைத்தார். பிறகு தன் வாசத்திற்கு பெருமாள் வந்தடைந்தார்.

தொண்டைமானின் மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து வேங்கடேஸ்வர ஸ்வாமியின் திவ்விய சரணங்கள் மீது பூபாரத்தை நிறுத்தினான். அவன்

வசுதானனுடன் பெருமாளுக்கு நித்திய, பக்ஷோத்ஸவ, மாதோத்ஸவ, வருடோத்சவங்கள் பக்தியுடன் செய்து வந்தான்.

**அர்ச்சா விக்கிரக மூர்த்தி**

ஸ்ரீமந் நாராயணன் சிலை வடிவத்தில் வைபவங்களோடு வீற்றிருந்தார். ஸ்ரீநிவாஸர் பத்மாவதி தாயாருடன் சேர்ந்து பக்தர்களுக்கு அவர்கள் வேண்டிய வரங்களை பிரசாதித்து வந்தார். அவர்கள் அளிக்கும் காணிக்கைகளைப் பெற்று சேஷாத்ரி சிகரத்தில் ஓளிமிக்கவராய் பிரகாசித்து வந்தார்.

இப்பொழுதும் பெருமாளின் அனுக்கிரகம் பக்தர்களுக்குக் கிடைத்துக் கொண்டு தான் இருக்கிறது. வேங்கடேஸ்வர ஸ்வாமி புகழ் எல்லா திசைகளிலும் வியாபித்துள்ளது. பக்த ஜனங்களிடமிருந்து திரவியத்தைப் பெற்று குபேரனுக்கு வட்டியைச் செலுத்திக் கொண்டே அவர் தன் வாக்குறுதியை நிலை நாட்டிக் கொண்டு வருகிறார்.

ஸ்வாமியின் லீலா மானுடச் செயல்கள் எண்ணற்றவை. கலியுகத்தில் பிரத்தியக்ஷ தெய்வமாக ஸ்வாமியைப் பல கோடிகணக்கான பக்தர்கள் சேவித்துக் கொண்டிருக்கிறார்கள். திருவேங்கடம் கலியுக வைகுண்டமாகப் பிரகாசித்துக் கொண்டு இருக்கிறது. இவ்வாறு ஸுதபௌராணிகர் சொல்லக் கேட்ட முனிவர்கள் யாவரும் மகிழ்ச்சியடைந்தார்கள். ஸுதரைப் புகழ்ந்தார்கள்.

அதன் பிறகு ஸ்வாமி கற்சிலையாக மாறுவதற்கான காரணம் என்னவென்று முனிவர்கள் கேட்டார்கள். அதற்கு பௌராணிகர் இவ்வாறு கூறினார். “முனிவர்களே ! ஸ்ரீநிவாஸர் தன்னுடைய ஸத்யஸ்வரூபத்தை எல்லோருக்கும் காண்பிக்க மாட்டார். ஆகையால் மக்கள் யாவரும் தரிசித்து உயர் நிலை அடைய வேண்டுமென்பதற்காக, அதற்குரிய வடிவத்தை ஸ்வாமி ஏற்று தன்னுடைய சின்னங்களைத் தரிசிக்க வைப்பார் தாமிரமூர்த்தி, சிலா மூர்த்தி, மிருத்திகா மூர்த்தி, தாருமூர்த்தி முதலான ரூபங்களில் பிரகாசித்து பல்வேறு பெயர்களுடன் பூஜைகளை ஏற்றுக் கொண்டு பக்த கோடிகளை அனுக்கிரகித்து வருகிறார்.



இவைகள் எல்லாமே அர்ச்சா மூர்த்திகள். ஸ்ரீஹரியின் சின்னங்கள். கண்களால் கண்ட அர்ச்சா விக்ரக வடிவங்கள் மனோ நேத்திரத்தில் காட்சி அளிக்கின்றன. இப்படி தரிசிப்பவர்களின் மனதிலுள்ள தோஷங்களை போக்குகின்றது. எல்லோரும் கடைத்தேறுவதற்கு அர்ச்சா ரூபங்கள் முக்கியமாகப் பயன்படுகின்றன. மூர்த்திகளை அர்ச்சித்து அதன் வாயிலாக ஸ்ரீஹரி எங்கும் நிறைந்தவர் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீராமர் கிருஷ்ணர் முதலிய விபவாவதாரங்களைத் தியானிக்க வேண்டும். அவர்களுடைய திவ்விய குணானுபவத்தை நாம் அடைய வேண்டும். அதன் மூலமாக, அநிருத்தன், ப்ரத்யும்நன், சங்கரஷணன், வாசுதேவன் ஆகியோரின் வியூக பிரபாவங்களை அறிந்து தியானம் செய்ய வேண்டும் பரமபதம் அடைய இவ்விதமான அர்ச்சா மூர்த்திகளே நமக்கு முக்கியமான சாதனங்கள் ஆவார்கள்.

எல்லோரையும் காத்திட ஸ்ரீநிவாஸப் பெருமாள் சுயம் வியக்தமான அர்ச்சா மூர்த்தியாக அருள்கின்றார். அவருக்கு என்றென்றும் மங்களம் உண்டாகட்டும்”.

இவ்வாறு கூறிய சூதமகரிஷியின் பேச்சைக் கேட்டு முனிவர்கள் ஸ்ரீவேங்கடாசலபதியை துதித்துக் கொண்டே சூதமகரிஷியோடு உரையாடிக் கொண்டு இருந்தார்கள்.



# நான்காம் அத்தியாயம்

ஸ்ரீநிவாஸப் பெருமாளின் அர்ச்சாவதார சரித்திரத்தைக் கேட்ட சௌனகாதி முனிவர்கள் திருப்தியடைந்து சூதமகரிஷியைப் பார்த்து இவ்வாறு கூறினர்: "சூதமகரிஷியே ! ஸ்ரீநிவாஸ ஸ்வாமி வரலாறு கேட்கக் கேட்க மேலும் ஆவல் உண்டாகிறது. அவர் பத்மாவதியை மணம்முடித்த பிறகு மகாலட்சுமி மீண்டும் கொல்லாபுரம் வந்து சேர்ந்தார் அல்லவா? ஸ்வாமி அவரைத் தன் நினைவில் நிறுத்திக் கொண்டாரா? அல்லது மறந்தாரா? என்பதை மேலும் விளக்கமாக கூறுங்கள்" என்றார்கள்.

அவர்களின் கேள்வியை கேட்டு புன்னகையோடு சூதமஹரிஷி வியாச பகவானை நினைத்து இவ்வாறு பதிலுரைத்தார். "இப்பொழுது நீங்கள் கேட்டபடி முன்பு தேவலன் தேவதர்சனைக் கேட்டார். அப்பொழுது தேவதர்சன் சொல்லிய விருத்தாந்தத்தை உங்களுக்குத் தெரியப் படுத்துக்கிறேன். கேளுங்கள்" என்றார்.

**ஸ்ரீவேங்கடேஸ்வரருக்கு லட்சுமியின் சிந்தனை**

ஸ்ரீவேங்கடேஸ்வர பெருமாள் பத்மாவதியுடன் சேர்ந்திருந்தாலும் லட்சுமி தேவியை மறக்கவில்லை. பலமுறை அவரை நினைத்துக் கொண்டார். இவ்வாறு சில வருடங்கள் கழிந்தன. அவரை தன்னுடன் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பது சரியில்லை என்று சிந்திக்கத் தொடங்கினார்.

பத்மாவதி, பெருமாளின் மனதை அறிந்தார். ஒரு நாள் பெருமாளிடம் "ஸ்வாமி உங்கள் மனதில் வேதனை இருப்பதை

உங்கள் முகமே தெரிவிக்கிறது. உங்கள் வருத்தத்திற்குரிய காரணமென்ன ? என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?" என்று அவருடைய திருவடிகளை வணங்கி கேட்டார். இனிமேல் சொல்லாமல் இருக்கக் கூடாது என்று நினைத்து ஸ்ரீநிவாஸர் பத்மாவதியிடம் "ஸ்ருஷ்டி இல்லாமலிருக்கும் காலத்தில் நான் நிர்குணபிரம்மம் போல இருந்தேன். அதன் பிறகு சித்ஸ்வரூபிணியாக லட்சுமி என்னிடம் சேர்ந்தாள். நான் ஆனந்தமடைந்தேன். லட்சுமியின் சேர்க்கையால் மட்டுமே நான் உலகத்தின் ஸ்ருஷ்டி கர்த்தாவாக நின்றேன். என் மகிமை யாவுமே ஸ்ரீதேவியின் அருள்தான். இப்போது அவள் பிரிந்திருப்பதால் மனம் வருத்தத்துடன் உள்ளது. பிருகுமஹரிஷியின் பாத ஸ்பர்சியம் இந்த பிரிவிற்குக் காரணம். அவள் என்னைப் பிரிந்த நாள் முதல் எத்தனையோ கஷ்டங்களுக்கு நான் ஆளானேன். பல்வேறு இன்னல்களை அனுபவித்தேன். திருமணத்திற்கு நான் வாங்கிய கடன் இன்னும் தீரவில்லை" என்றுரைத்தார்.

அதைக் கேட்ட பத்மாவதி "நாதா! உங்கள் மகிமைக்குக் காரணமான லட்சுமியை இவ்வாறு பிரிந்திருப்பது சரியில்லை. எவ்விதமாயினும் அவரைச் சாந்தப்படுத்தி அழைத்து வருவதே சிறந்தது. அவர் வந்தால் உங்கள் இருவரையும் சேவித்த பாக்கியம் எனக்குக் கிட்டும். நாம் இருவரும் சென்று அவரை அழைத்து வரலாம் வாருங்கள்" என்று கூறினாள்.

"பத்மாவதி ! நீ ஒருத்தி என்னோடு சேர்ந்து இப்பொழுது மகிழ்ச்சியாக இருக்கிறாய். லட்சுமிதேவி என் மார்பில் அமர்ந்து கொண்டால், நீ அதை சகித்துக் கொள்வாயா" என்று ஸ்ரீநிவாஸர் அவளைக் கேட்டார்.



அதற்கு பத்மாவதி இவ்வாறு கூறினாள் :– "ஸ்வாமி ! ரமாதேவி உங்கள் மார்பில் அமர்ந்தால் எனக்கு ஒரு குறையுமில்லை. சீதையாக இருக்கும் போது, அவர் தான் என்னை உங்களைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கூறினார். அவரை இங்கு வரவழைப்பது நல்லது. நான் சென்று அவளை சம்மதிக்க வைத்து இங்கு அழைத்து வருகிறேன்".

அதைக் கேட்ட ஸ்ரீநிவாஸர் "உன் பேச்சு சந்தோஷத்தைத் தருகிறது. நீ வகுளாவிடம் இருப்பாயாக! நான் சென்று ரமாதேவியை அழைத்து வருகிறேன்" என்று சொன்னார்.

## பாதாளம் சென்ற லட்சுமி தேவி

இருவரும் இவ்வாறு உரையாடிக் கொண்டிருந்த விஷயத்தை கொல்லாபுரத்திலுள்ள லட்சுமிதேவி தன்னுடைய ஞான திருஷ்டியினால் அறிந்தார். "இப்பொழுது ஸ்வாமி வந்து என்னை அங்கு வரச் சொன்னால் நான் வர மாட்டேன் என்று சொல்லலாகாது. நான் அங்கு சென்றால் பத்மாவதிக்கு வருத்தம் நேரிடலாம். இவையெல்லாம் எனக்கு எதற்கு?" என்று நினைத்து அவர் கொல்லாபுரத்தை விட்டு பாதாளத்திலுள்ள கபில முனிவரிடம் சென்றார். முனிவரும் அவளைத் தகுந்தவாறு ஆதரித்தார்.

ஸ்ரீஹரி கொல்லாபுரம் சென்று அங்கு லட்சுமிதேவியைத் தேடினார். அவ்விடத்தில் அவர் இல்லையென்பதை அறிந்து

வேதனை அடைந்தார். ரமாதேவியின் பிரிவு பெருமாளை மிகவும் துன்புறுத்தியது.

அதற்குப் பிறகு லட்சுமிதேவியை ஓர் அர்ச்சா ரூபமாக அமைத்து அந்த ரூபத்தை பூஜித்து வந்தார். இவ்வாறு பத்து வருட காலம் அவ்விடத்திலேயே தவம் செய்து வந்தார். ஒரு நாள் அசரீரி வாணிசொன்ன வார்த்தைகள் அவர் காதில் விழுந்தன.

**அசரீரி வாணியின் அறிவிப்பு**

“தேவ தேவனே ! ரமாதேவி இப்பொழுது இங்கு உனக்குத் தென்படமாட்டார். இங்கிருந்து சென்று சேஷாசலம் அருகே ஓடுகின்ற ஸ்வர்ணமுகியை அடைந்து, அந்த நதிக்கு வடக்கில் நதிக் கரையில் தவம் புரிவாயாக ! சொர்க்கத்திலிருந்து ஸ்வர்ண கமலங்களைக் கொண்டு அங்கே பிரதிஷ்டை செய்வாயாக! அதற்கு கிழக்கில் சூரிய தேவனை பிரதிஷ்டை செய்தால் அந்தக் கமலம் நிரந்தரம் விரிந்து ஒளிக்கும் நிலையை அடையும், நீ அக் கமலத்தின் மீது பார்வையை நிலைநிறுத்தி ரமாதேவியைப் பூஜித்தால் பிரத்யட்சம் ஆவார். 12 வருட காலம் உன் மனதில் லட்சுமி தேவியை நிறுத்தி மௌனமாக லட்சுமி மந்திரத்தை ஜபம் செய்தால், அவர் தோன்றுவாள். அப்பொழுது அவரை உன் மார்பில் நிறுத்திக் கொள்வாயாக” என்று கூறியது.

அதைக் கேட்ட ஸ்ரீநிவாஸர் கண்களைத் திறந்து அவை யாவுமே அசரீரி வாணியின் சொற்கள் என்று தெரிந்து கொண்ட பின், கருடனை நினைத்தார், கருடன் அங்கு வந்தார். கருடன் மீது ஏறி சேஷாத்திரியை அடைந்தார். அந்த மலைக்கு அருகிலுள்ள



அகஸ்தியர் ஆஸ்ரமத்திற்குக் கிழக்கிலுள்ள ஸித்திஸ்தலத்தை அடைந்தார்.

**ஸ்ரீவேங்கடேஸ்வரரின் தவம்**

அங்கு வாயு தேவனை நினைத்து அவன் வாயிலாக சுவர்கத்திலுள்ள ஆயிரம் தளமுள்ள பத்மத்தைக் கொண்டு வர செய்தார். பாறையில் கோகர்ணம் அளவிற்கு ஓர் பள்ளத்தை தோண்டினார். அதில் பத்மநாளத்தை நட்டார். கிழக்கில் சூரியதேவனை பிரதிஷ்டை செய்தார். மேற்கு திசையில் பத்மாசனத்தில் உட்கார்ந்து மிகவும் தீவிரமாக லட்சுமி மந்திரத்தை ஜபித்து கொண்டு மனத்தில் தியானித்தார்.

அப்படி தவம் செய்பவர் விஷ்ணு மூர்த்தியே என்று அறியாதலால் தவ பங்கம் செய்வதற்காக இந்திரன் ரம்பை முதலிய தேவகன்னிகைகளை அனுப்பினான். அந்த கன்னிகைகளின் சேஷ்டைகளுக்குச் சுவாமி சலனமடையவில்லை. அவர்களுக்குப் பாடம் கற்பிக்கவே ஸ்வாமி ஓர் ஜகன்மோகினியை சிருஷ்டி செய்தார். அவளைப் பார்த்தவுடன் அக்கன்னிகைகள் வெட்கத்துடன் ஸ்வாமியின் நிஜ ஸ்வரூபத்தைப் புரிந்து கொண்டு திரும்பிச் சென்று இந்திரனுக்கு நடந்தவற்றை தெரிவித்தார்கள். இந்திரனும் தன் தவறை உணர்ந்து பச்சாத்தாபம் அடைந்தான்.

இதுவரையில் ஸ்ரீஹரி பத்மாவதியை விட்டுச் சென்று இருபத்திரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அவரும் அங்கு வேதனையுடன் தவித்துக் கொண்டிருந்தார்.

வகுளமாலிகையிடம் தன் கவலையைத் தெரிவித்த போது வகுளமாதா அவருக்கு அன்போடு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள்.

பாதாளத்தில் கபிலாஸ்ரமத்திலிருந்த லட்சுமி தனக்காகத் தன் பதி தவம் செய்து கொண்டிருக்கிறார் என்று அறிந்து ஒரு நாள் கபில மகரிஷியிடம் இவ்வாறு கூறினாள்.

“முனிவரே ! ஸ்ரீநிவாஸப் பெருமாள் பத்மாவதியை மணம் செய்துக் கொண்டார். அவளை மலையில் விட்டு விட்டு தற்போது எனக்காக மலையடிவாரத்தில் தவம் செய்து கொண்டிருக்கிறார். இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டாள். தான் ஸ்ரீஹரியை விட்டு வருவதற்கு பிருகு மகரிஷியின் பாதஸ்பரிசம் தான் காரணம் என்றும் கூறினார்.

**கபில முனிவரின் அறிவுரை**

கபில முனிவர் அவரிடம் “பிருகு மகரிஷி உன்னுடைய பேரன்தானே ? உன் மணவாளன் இந்த விஷயத்தை உனக்குச் சொல்லவில்லையா ? நீ சிந்திக்காமல் உன் பதி சொன்ன வார்த்தைகளைக் கேட்காமல், அவரை விட்டு கொல்லாபுரம் போனது சரியா ? உன் பதிக்குப் பிருகு பாத ஸ்பரிசம் சம்மதமாக இருக்கும் போது உனக்கு சம்மதமில்லையா? பிருகு செய்த தவறு என்ன? மும்மூர்த்திகளின் தகுதியைப் பரிசீலிக்க வந்தார். பிரம்ம ருத்ராதிகளை விட விஷ்ணுவே சிறந்தவர் என்று நிருபிக்கவே அவர் அப்படி நடந்து கொண்டார். அவர் மீது சினம் கொண்டு உன் பதியைப் பிரிந்தது நீ புரிந்த தவறு அல்லவா ?” என்று உரைத்தார்.



மீண்டும் இவ்வாறு கூறினார். “திருமால் கருணையோடு உன்னை அழைக்க வந்திருக்கும் போது நீ அலட்சியம் செய்வது நல்லதல்ல. நீ அறியாத நீதி இருக்கிறதா? பதிவிரதையான உனக்கு இச் செயல் சரியானதா ? இருபத்திரண்டு வருடம் உனக்காக தவம் செய்த வாசுதேவனை விட்டு இருப்பது நல்லதல்ல. இப்பொழுதே நீ கிளம்பி போய் ஸ்ரீஹரியிட்ட அந்த பத்மநாளத்தின் வழியாக உன் பதி வைத்திருக்கும் பத்மத்தின் மீது நிற்பாயாக. பிரம்மாதி தேவர்கள் அங்கு வருவார்கள். அப்பொழுது அனைவரின் முன்னிலையில் திருமாலின் மார்பை நீ அடைவாயாக!” என்று கூறினார்.

லட்சுமி தேவிக்கு கபில மகரிஷி சொன்ன வார்த்தைகள் சரியாகத் தோன்றின. அவர் செய்த தவறை அறிந்து கொண்டார். தவறுகள் புரிந்த தேகத்தோடு அல்லாமல் மற்றொரு தேகத்தோடு விஷ்ணு மூர்த்தி பூஜிக்கும் பத்மத்தில் பிரவேசிக்க வேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டார். தன் முடிவை முனிவருக்கு அறிவித்தார்.

“லோக மாதா ! நீ ஸ்ரீநிவாஸரின் நித்யானபாயினி. அவர் எத்தனை அவதாரங்கள் எடுத்தாலும் அத்தனை தேகங்களைப் பூண்டவள் நீ. நீங்கள் இருவரும் ஆதி தம்பதிகள். மூவுலகங்களையும் படைத்தவர்கள், ஏதேனும் ஒரு முக்கிய காரியம் இருப்பதால் மட்டுமே உங்களுக்குள் பிரிவு ஏற்பட்டிருக்கும். நீ தவறு செய்தாய் என்று நான் சொல்வதற்கு

கோபிக்க கூடாது. எனக்குத் தோன்றியவற்றை நான் சொன்னேன்" என்று கபிலர் கூறினார்.

லட்சுமி, "முனீந்திரரே ! நீர் இப்படி சொல்வது நன்று! என்னுள் இதுவரையிருந்த விரோதம் தொலைந்து விட்டது. பத்மாவதி சகிதனான ஸ்ரீஹரியின் மார்பில் நான் எப்படி வாசம் செய்வேன் ? என்ற எண்ணத்தில் நான் ஸ்ரீஹரியைப் பிரிந்து இந்த ஆஸ்ரமத்திற்கு வந்து சேர்ந்தேன் என்று சொன்னார்.

அதற்கு முனிவர், "சந்திரமுகி ! பெருமாள் கிருஷ்ணனாக இருக்கும் போதே ஆயிரக்கணக்கான பெண்களுடன் சேர்ந்து எல்லோருக்கும் ஒவ்வொரு ரூபத்தில் தோன்றி மகிழ்ச்சியைத் தந்தார். அப்பொழுது நீ ஸ்ரீஹரியை ஒதுக்கி விட்டாயா ? எங்கள் ஆசிரமத்தைப் புனிதப்படுத்தவே நீ இங்கு வந்து சேர்ந்தாய். இனி உன் பதியைப் பிரியாமல் சேஷாத்ரி மீது வீற்றிருப்பாயாக!" என்று கூறினார்.

முனிவர் வார்த்தைக்கு ரமாதேவி சந்தோஷ மடைந்தார். தன்னுடைய பழைய உடலை தவ நிஷ்டையில் ஆசிரமத்தில் நிறுத்தினார். சிறப்பான திவ்விய சரீரம் ஏற்றார்.

### வியூகலட்சுமியின் தோற்றம்

பத்ம சரோவரத்தில், பத்ம நாளத்தில் பிரவேசித்தார். நாளத்தின் வழியாக வந்து பத்மகர்ணிகை மீது சுகாசனத்தில் அமர்ந்தார். அந்தக் காட்சி ஆயிரமாயிரம் மின்னல்கள் ஓரிடத்தில் சேர்ந்தது போல தோற்றமளித்தது.



திருமால் அவரைப் பார்த்ததும் பரமானந்தமடைந்தார். அவரும் ஸ்ரீஹரி முகத்தைப் பார்த்து வெட்கத்தால் தலை குனிந்தார். தனக்காக தவம் செய்தவராக ஜடாமுடியுடன் அவர் வைராக்யமிக்க உடலைப் பார்த்து வேதனையடைந்தார்.

அதையறிந்து விஷ்ணு சகல ஆபரணங்களையும் அணிந்தவராக சங்கு சக்கரங்களை கையில் ஏந்தி நீலமேக சரீரத்தோடு தோற்றமளித்தார். ஸ்ரீரமாதேவி போகத்தில் ஆழ்ந்து தன்னைப் பார்த்து கொண்டிருப்பதை கவனித்து, திருமாலும் தலை வணங்கி மௌனம் வகித்தார்.

பிரம்மா, ருத்திரர் முதலானோர் அவரவர் வாகனங்களில் அமர்ந்து பத்ம சரோவரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். மங்கள வாத்தியங்கள் முழங்கின. பூமாரி பொழிந்தது. எல்லோரும் ஸ்ரீதேவியையும் ஸ்ரீஹரியையும் அநேக தோத்திரங்களால் துதித்து வணங்கினார்கள். அப்பொழுது பத்மத்தில் வீற்றிருந்த மஹா லட்சுமிதேவியை பார்த்து, அவர்கள் இவ்வாறு பிரார்த்தனைச் செய்தார்கள். "அம்மா ரமாதேவி! நீ இனிமேல் உன் ஸ்வாமியின் மார்பின் மீது அமர்வாயாக! சேஷாத்ரி மலை மீது புகழுடன் வீற்றிருந்து எங்களுக்கு அருள் புரிவாயாக" என்று வேண்டினார்கள்.

### விஷ்ணுவின்மார்பை லட்சுமி அலங்கரித்தல்

"கார்த்திகை சுத்த பஞ்சமி, சுக்கிர வாரம், உத்திராடம் நட்சத்திரம் கூடிய இந்நாள் சுபமானது. நீ இந்நாளே ஸ்ரீஹரியின் மார்பை அடைய வேண்டும். இனி தாமதம் செய்ய வேண்டாம்"

என்று தேவாதி தேவர்கள் கூறினார்கள். பிராட்டியும் எதுவும் பேசாமல் மௌனம் வகித்தார். பிரம்மா பிருகுமஹரிஷியைப் பார்த்து கண் சாடை செய்தார். அப்பொழுது பிருகுமஹரிஷி லட்சுமியிடம் சென்று கைகளைக் கூப்பிக் கொண்டே "தாயே! என் தவறுகளை மன்னிப்பீராக! இப்பொழுதாவது நான் உங்கள் மைந்தனென்று நினைப்பீராக! ஸ்ரீஹரியின் மார்பில் வீற்றிருந்து அருள்வீராக" என்று பிரார்த்தித்தார்.

அப்பொழுது ஸ்ரீதேவி இயல்பான தன் குணத்தால் சந்தோஷமடைந்து பிருகுவை ஆதரித்து இவ்வாறு கூறினார்.

"முனிவரே ! உம்முடைய திடமான பக்தியை நிகரற்ற தைரியத்தைப் பாராட்டுகிறேன். ஸத்வ குணத்தோடு கூடிய என் ஸ்வாமியை நான் சந்தேகப்பட்டு அன்றைய தினம் சென்று விட்டேன். ரஜோ குணத்தின் தாக்குதலால் என் வாழ்நாளில் பதியை விட்டு அலைந்தேன். காலத்தின் போக்கை யாராலும் மீள முடியாது. இது என் தவறு அல்ல, உம் தவறுமல்ல. இந்த நாடகத்திற்கு சூத்திரதாரியான திருமால் நடத்திய விநோதமே ஆகும். இவையெல்லாம் அவருக்கு மட்டுமே தெரியும்."

இவ்வாறு கூறி பிருகுவை விட்டு லட்சுமிதேவி ஸ்ரீஹரியின் பாதபத்மத்தின் மீது பார்வையை நிலைநிறுத்தினார். பக்தியாலும், அன்பினாலும் அப்பொற்றாமரையிலுள்ள தங்கப் பதுமையாக வீற்றிருந்தார். அந்த ஜகந்நாதனே தன்னை எடுத்து அவர் மார்பில் நிறுத்திக் கொள்வார் என்று நினைத்தார்.

அப்பொழுது பிரம்ம ருத்ராதிகள் அவருடைய எண்ணத்தை அறிந்தார்கள். திருமாலை வணங்கி "ஜகதீஸ்வரா! இந்தப்



பாற்கடல் திருமகளை எடுத்து உம் மார்பின் மீது வைத்துக் கொள்வீராக!" என்று பிரார்த்தனை செய்தார்கள்.

அதற்கு ஸ்ரீஹரி, "அவருக்கு எக்காலத்திலும் வாசமாக உள்ள என் மார்பின் மீது இனிமேல் நிம்மதியாக அமரச் சொல்லுங்கள்" என்று கூறினார். அவர்களும், "தேவி இப்பொழுது உம் பிராணநாதனின் மார்பில் வாசம் செய்வீராக! இதுவே நல்ல லக்கினம். தாமதிக்க வேண்டாம்" என்று கூறினார்கள்.

அப்பொழுது சகல ஆபரணங்களையும் தரித்த மஹாலட்சுமியின் சரீரத்திலிருந்து மலர்களின் நறுமணம் நான்கு திசைகளிலிலும் பரவியது. முன்னால் திருப்பாற்கடலில் இருந்து தோன்றியது போல் பத்மத்திலிருந்து வெளியே வந்து, பதியின் அருகில் வந்து நின்றார். தனக்கு வாசமாக உள்ள ஸ்ரீஹரியின் மார்பை சந்தனத்தால் பூசினார். கையில் கங்கணங்கள் ஒலிக்க ஒரு பெரிய பூமாலையை ஸ்ரீஹரியின் கழுத்திலிட்டாள். மகிழ்ச்சியோடு தன் இரு கைகளாலும் அவரை அணைத்து திருமால் தன் மார்பில் நிறுத்திக் கொண்டார். அப்பொழுது பூ மழை பொழிந்தது. மங்கள வாத்தியங்கள் முழங்கின. இந்திராதிதேவர்கள் ஸ்ரீஹரியை நமஸ்கரித்தார்கள். ரம்பை முதலியவர்கள் நாட்டியம் செய்தனர். கந்தவர்கள் கானம் இசைத்தார்கள். பார்வதி சரஸ்வதி முதலானதேவிமார்கள் மங்கள ஆரத்தி எடுத்தார்கள். சிவனும் பிரம்மாதிதேவர்களும் முனிவர்களோடு சேர்ந்து வேத பாராயணம் செய்தார்கள். விஷ்ணுவும் ஆனந்தத்தோடு மஹாலட்சுயுடன் சேர்ந்து கருட வாகனத்தின் மீது அமர்ந்தார்.

அப்பொழுது பிரம்ம ருத்ராதிதேவர்கள் மஹாலட்சுமி தோன்றிய இந்த பத்மசரோவரத்தில் கார்த்திகை சுக்கில பஞ்சமி தினத்தன்று நீராடினால் அவர்களுக்கு லட்சுமி கடாட்சம் மிகப் பெருகும், மேலும் முக்தி பெறுவார்கள்'' என்று உரக்க கூவினார்கள். எல்லோரும் அந்தத் தீர்த்தத்தை நன்கு புகழ்ந்தார்கள். அதிலுள்ள நீரை சிரஸில் தெளித்துக் கொண்டார்கள். பிறகு வாகனங்களில் ஏறி தம் இருப்பிடங்களுக்கு புறப்பட்டார்கள்.

**ஆனந்த நிலையத்தில் லட்சுமியும் திருவேங்கடவரும்**

அவர்களோடு சேர்ந்து லட்சுமியும் நாராயணனும் வேங்கடாத்ரிச் சென்றடைந்தனர். ஸ்ரீவராஹ ஸ்வாமியின் அனுமதி பெற்று தங்கள் மண்டபத்தை அடைந்தார்கள். அப்பொழுது ஆபரணங்களை அணிந்த பத்மாவதிதேவி ஆனந்த நிலையத்திற்கு வந்து ஸ்ரீஹரியையும் லட்சுமியையும் நமஸ்கரித்தார். பத்மாலயத்தில் தோன்றிய லட்சுமி பத்மாவதியை தக்கவாறு ஆதரித்தாள். பிரம்மாதிதேவர்களுக்கு விருந்து அளித்து வஸ்திரம் ஆபரணங்களைச் சமர்ப்பித்தனர். எல்லோரும் நிறைவோடு லட்சுமி நாராயண தம்பதியரின் அனுமதி பெற்று அவரவர்இருப்பிடம் சென்றார்கள்.

**லட்சுமி வேங்கடவரின் கேளிக்கை உரையாடல்**

வேங்கடேஸ்வரர், லட்சுமி, பத்மாவதியோடு சேர்ந்து மகிழ்ச்சியுடன் இருக்கும் போது ஒரு நாள் பகவான் லட்சுமியைப் பார்த்து, “தேவி! உன் வருகை எனக்கு மகிழ்ச்சியை அளித்தது.



திருமணத்திற்காக குபேரனிடம் இருந்து வாங்கிய கடன் தீரவில்லை. இதற்கு என்ன உபாயம் செய்வது” என்று கேட்டார். அதற்கு லட்சுமி “ஸ்வாமி ! நான் உங்கள் திருமணத்திற்கு வந்திருந்த போது என்னை நீங்கள் கேட்டிருந்தால் வேண்டிய பணத்தை தந்து இருப்பேன் கடன் வாங்க வேண்டிய அவசியம் என்ன? என்று வினவினார்.

“என்னை விட்டுப் பிரிந்து நீ துன்பத்தோடிருக்கும் போது நான் எப்படி பணம் கேட்பேன்?'' என்று கோவிந்தன் பதில் அளித்தார். அதற்கு லட்சுமி நடந்தது நடந்து விட்டது. இப்பொழுது நீங்கள் விரும்பும் அளவிற்கு நான் பணம் தருகிறேன். உங்கள் கடனைத் தீர்த்துக் கொள்ளுங்கள்” என்று கூறினாள்.

அதற்கு ஸ்ரீஹரி “உன் மகிமை என்னவென்று எனக்குத் தெரியாதா? நீ இப்பொழுது பணம் கொடுக்க வேண்டாம். வட்டியை செலுத்திக் கொண்டே கலியுகம் முடிவில் கடனைப் பூர்த்தியாக அடைக்கிறேன். அதற்குப் பிறகு வைகுண்டம் வந்து சேர்வேன். அதுவரை இந்த சேஷாசலத்தின் மீதிருந்து மக்களை ஆண்டு வருவேன். அவர்களின் பாவங்களைப் போக்கி கொண்டிருப்பேன். இனியும் செய்ய வேண்டிய வேலைகள் உள்ளன. இப்பொழுதே கடனை அடைக்க வேண்டுமென்ற அவசியமில்லை” என்று கூறினார்.

பிறகு இவ்வாறு கூறினார்: “கலியுகத்தில் மக்கள் பாபங்களைச் செய்து நோய்களால் துன்புறுவார்கள். அப்பொழுது என்னிடம் முறை இடுவார்கள். அவர்களைக்

காப்பாற்ற வேண்டும். அவர்கள் செய்த தீயவினைகளை அவர்கள் சம்பாதிக்கும் திரவியத்தின் மீது ஆகர்ஷணம் செய்வேன். அந்தப் பாவ ரூபத்தில் வந்த திரவியத்தை பாமர மக்களுக்குக் கொடுத்து விடுவேன். புண்யாத்மாக்கள் கொடுக்கும் திரவியத்தில் சிறிதளவு குபேரனுக்குச் வட்டியாக செலுத்தி விடுவேன்.

லட்சுமி! “நீ எல்லோருக்கும் பணத்தைக் கொடு. அந்தப் பணத்தை நான் இங்கே ஈர்ப்பேன். வேண்டியவர்களுக்கு அதை கொடுத்து என் ஆட்சியை நடத்தி வருவேன். கலியுகம் முடியும் வரை இப்படியே நடக்கும். கலியுக முடிவை எல்லையிட்டு அன்றைய தினம் கடன் பத்திரம் எழுதிக் கொடுத்தேன்.”

அதற்குப் பிறகு லட்சுமிதேவி இவ்வாறு கூறினார். “உமக்கே நான் பணம் அளிக்கிறேன் என்றால் வேண்டாம் என்கிறீர். மனிதர்களுக்குக் கொடு என்று சொல்கிறீர். இதிலுள்ள உள் நோக்கம் என்ன ? கலியுகத்தில் மக்கள் கல் நெஞ்சம் படைத்தவர்கள். தான தருமங்கள் என்னும் நல்ல காரியங்களைச் செய்ய மாட்டார்கள். ஆகையால் அவர்கள் ஏழ்மையால் அவதிப்படுவார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு நான் எப்படி திரவியத்தை அளிப்பேன் ?. உமக்கு எவ்வளவு வேண்டும் என்றாலும் தருகிறேன் நீங்களே அவர்களுக்குக் கொடுத்து விடுங்கள்” என்றார்.

அதற்கு ஸ்வாமி இவ்வாறு கூறினார்: “லட்சுமி! மோட்சத்தை வேண்டுபவர்களுக்கு முக்தியையும் புண்ணிய காரியங்கள் செய்பவர்களுக்கு புண்யத்தின் பலனையும் அருளி



அவர்களைக் காப்பாற்றுவதே எனக்குச் சம்மதமானது. நீயோ செல்வத்திற்கு அதிபதி. மக்களுக்குச் செல்வத்தை தருகின்ற வேலை உன்னுடையது. அவர்களிடமிருந்து அதை வாங்கி அவர்களுக்கு நேரிடும் அபாயத்தைப் போக்கி பிள்ளைப் பேறு முதலியவற்றைக் கொடுத்து மகிழ்ச்சி அளிப்பது என்னுடைய தர்மமாகும்”.

அப்பொழுது லட்சுமி, மனிதர்கள் தான தருமங்களைக் கடைபிடிக்க மாட்டார்கள். அப்படியிருக்கும் போது நான் அவர்களுக்கு பணம் கொடுப்பது எதற்கு? அதை அவர்கள் பெற்றுக் கொண்டு உமக்கு எப்படிதருவார்கள்? பணம் சேர்ந்தவுடனே அகங்காரம், ஆடம்பரம் முதலிய கெட்ட குணங்களை வளர்த்துக் கொள்வார்கள். அவர்கள் உண்மையாக உமக்கு திரவியத்தை தருவார்களா ?” என்று கேட்டாள்.

அதற்கு ஸ்வாமி லட்சுமி! “நீ சொல்வது உண்மை. ஆனால் இதில் ஒரு உபாயம் அடங்கியுள்ளது. மக்கள் பாபங்கள் செய்து நோய் வாய்படும் போது என்னை நினைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு நான் கனவில் தோன்றி அவர்களிடமிருந்து காணிக்கைகள் பெறுவேன். அதற்கு வட்டியை வளர்த்து அவர்களை வருடந்தோறும் வேங்கடாத்திரிக்கு அழைத்து வருவேன். அவர்கள் கொடுத்த பணத்தால் புண்ணிய பாவங்களை வேறுபடுத்தி நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் பங்கு செய்து கொடுத்து விடுவேன். அவர்களால் தரும கார்யங்களை செய்ய வைப்பேன். ஆகையால், மக்கள் சிறிதளவு தானம் செய்தாலும் அவர்களுக்கு நீ அபயப்பிரதானம் செய்து,

அருள் காட்டவேண்டும், நான் அவர்களைத் தானதர்மங்களைச் செய்யத் தூண்டுவேன்" என்று கூறினார்.

இங்கே செய்த தானதருமம் சிறிதளவானாலும் அதிக பலனைப் பெறக் கூடியது. இந்த உபாயமில்லையென்றால் கலிபுருஷன் எல்லா தருமங்களையும் நாசப்படுத்தி மக்களைத் துன்புறுத்துவான். அதற்காவது மக்களுக்குத் திரவியங்களைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது நான் கடனைச் செலுத்தி விட்டால் எனக்கு இங்கு வேலையில்லாமல் போய்விடும் என்று கூறினார். அப்பொழுது லட்சுமி தேவி "அருள் புரிபவனே உமக்கு உண்மையை கூறுகிறேன் – உலகில் தான தருமங்களைச் செய்து உனக்குச் சமர்ப்பிக்கும் மக்களுக்குத் தனதானியங்களை நான் கொடுக்கிறேன். பாபங்கள் செய்தவர்களின் திரவியங்களை நாசப்படுத்துவேன்" என்றார்.

அதற்கு வேங்கடேஸ்வர ஸ்வாமியும் சம்மதித்தார். மக்கள் எல்லோரும் வேங்கடாத்திரிக்கு வந்து செல்வங்களைச் சமர்ப்பித்து ஸ்வாமியின் அருளைப் பெற்றார்கள்.

இவ்வாறு கூறிய தேவதர்சனனிடம் தேவலன் இவ்வாறு கேட்டான் "லட்சுமி பழைய உடலால் கபிலாஸ்மரத்தில் தவம் செய்து கொண்டிருந்து விட்டார். அவர் பிறகு இப்பூவுலகத்தில் எப்படி வந்து சேர்ந்தார் ? தெரிவிப்பீர்களாக!"

### வீரலட்சுமி சுக தேவரின் ஆசிரமத்தை அடைதல்

அதற்கு தேவதர்சனன் இவ்வாறு பதிலுரைத்தான். லட்சுமிதேவி நற்குணங்களோடு மனத்தை தன்பதிமேல் வைத்து



தேகத்தை விட்டு உலகம் யாவும் விஷ்ணுமயம் என்று பாவித்தார். தன்னுடைய தபோ நிஷ்டையை மீண்டும் தொடங்கினார். இவ்வாறு சில வருடங்கள் கழிந்தன.

ஒரு நாள் வேங்கடேச்வர ஸ்வாமி இவ்வாறு நினைத்தார். நான் அவளை நினைத்து தவம் செய்வேன் என்றும், இப்பொழுது லட்சுமிதேவியும் என்னை நினைத்து தவம் செய்து கொண்டிருக்கிறாள். பூவுலகத்திற்கு அவள் திரும்பி வர ஒரு உபாயம் செய்வேன் என்று நினைத்து பெருமாள் வீரலட்சுமியை மனதில் தோற்றுவித்து தன் உருவத்தைத் மறையும்படி செய்தார். அதனால் அவர் தியான நிஷ்டை சலனமடைந்தது. தன் கண்களைத் திறந்து பார்த்தால் அங்கு திருமால் இல்லை. கவலையோடு கபிலனிடம் சென்றார்.

கபில முனியும் அவரைப் பார்த்து. "சலனமில்லாத உன் தவம் முற்றிலும் பலன் அடைந்தது. நீ இங்கிருக்க வேண்டாம். சேஷாத்திரியின் அடிவாரத்திலுள்ள பத்மசரோவரத்தை அடைவாயாக! அங்கு சுக முனி புத்திரன் பாஞ்சராத்திர முறைப்படி உன்னை வழிபடுவான்" என்று கூறினார்.

கபில முனி சொன்னது போல லட்சுமி தேவி திவ்விய ரதத்தின் மீது அமர்ந்து மத்தியான வேளையில் பாதாளத்திலிருந்து பூமியைப் பிளந்து கொண்டு 108 தோழிகள் அவரைச் சேவித்துக் கொண்டிருக்க சேஷாத்திரிமலைக்குத் தென் திசையிலுள்ள ஸ்வர்ணமுகி நதியின் மேற்கிலுள்ள பத்மசரோவரத்தை அடைந்தார். கபில முனி சொன்னபடி சரோவரத்தின் நடுவில் வீற்றிருந்த லட்சுமி தேவியைப் பார்த்து

பாரிஜாத மலர்களை அவர் மீது தூவி தேவர்கள் ஜய கோஷமிட்டார்கள்.

அவள் திவ்விய மேனி ஒளி உலகமெல்லாம் பரவியது. அதைப் பார்த்த ஸ்ரீநிவாஸர் கருடாரூடராய் அங்கு வந்து சேர்ந்தார். பிரம்மருத்ராதிதேவர்களும் அச்சமயம் அங்கு வந்தனர்.

**பத்ம தீர்த்தத்தின் சிறப்பு**

அன்று கார்த்திகை சுத்த பஞ்சமி, வெள்ளிக்கிழமை. வியூக லட்சுமி திருமாலுக்கு முதலில் காட்சியளித்தார். சிறிது காலத்திற்குப் பிறகு அந்த நன்னாளில் வீரலட்சுமியும் காட்சியளித்தார். இது மிகவும் சிறந்த நாள் என்று பிரம்மாதிதேவர்கள் நினைத்தார்கள். அவர்கள் ஸ்வாமியிடம் தேவா ! இந்தப் புண்ணிய தீர்த்தத்திலே மஹாலட்சுமி, வீரலட்சுமி இருவரும் தோன்றினார்கள். இந்த தீர்த்தத்திற்கு பத்மதீர்த்தம் என்ற பெயரே சிறந்தது. ஆகையால் இந்த சுபதினத்தில் பத்மதீர்த்தத்தில் நீராடியவர்கள் தங்கள் பாவத்திலிருந்து விடுபட்டு பாக்கியத்தைப் பெறுவார்கள்'' என்று நிச்சயித்து சொன்னார்கள்.

அதன் பிறகு எல்லோரும் அதில் நீராடினார்கள். அந்த தீர்த்தத்திற்கு தென் கிழக்கில் விஸ்வகர்மாவால் திவ்வியமான ஆலயம் அமைக்கப்பட்டது. வீரலட்சுமியைப் பிரார்த்தித்து அவரை அழைத்துக் கொண்டு ஆலயத்தில் நிலை நிறுத்தினார்கள். சுகமுனிவர் பாஞ்சராத்திர ஆகம முறைப்படி பூஜைகள் செய்தார்.



ஸ்ரீநிவாஸர் தம் கழுத்தில் அலங்கரித்திருந்த பூமாலையை அவருக்கு அணிவித்தார். சுகாஸ்ரமத்தை அக்கிரஹாரமாக மாற்றி முனிவருக்கு அளித்தார். எல்லோரையும் அவரவர் நிலைக்கேற்ப ஆதரித்து வழியனுப்பினார்.

அதன் பிறகு வீரலட்சுமியிடம் ஸ்வாமி இவ்வாறு கூறினார். “லட்சுமி ! உன் பழைய உடலை பார்த்தேன். நீ வியூகலட்சுமியுடன் சேர்ந்து வேங்கடாத்திரி மீது வந்து என்னோடு இருந்து விடலாம்” என்று கூறினார். அவரும் ஸ்ரீநிவாஸரை வணங்கி “பிராணநாதா! நீர் எனக்காக அமைத்த திவ்விய ஸ்தலம் இது. இது மிகவும் புனிதமானது. சுகக்ஷேத்திரம். நான் இங்கேயே இருந்து விடுகிறேன். என் இதயத்தில் நீர் தங்கி இருந்து வியூகலட்சுமியை உங்கள் மார்பில் வைத்துக் கொள்ளுங்கள். என்னை இங்கேயே வைத்து விட்டு, அருள்வீராக! எனக்கு உங்கள் அருள் இருந்தால் போதும் நான் வரவில்லை என்று வருந்த வேண்டாம். வியூகலட்சுமி உருவத்தில் உங்கள் மார்பின் மீது வாசம் செய்வேன். தேவர் எந்த குறையுமில்லாமல் ஆதரிப்பீராக! திருமலைக்கு வரும் பக்தர்களுக்கு வரங்களை அருள்வீராக!” என்றார்.

அதற்கு வேங்கடேஸ்வரர் சம்மதித்து வீரலட்சுமியை விட்டு வியூக லட்சுமியோடு சேஷாத்திரிமலைக்கு வந்து சேர்ந்தார். பத்மாவதி, வியூகலட்சுமி இவர்களுடன் சேர்ந்து சுகமாகக் காலத்தை கழித்தார். அங்கு சாயை(நிழல்)வீரலட்சுமிக்கு சுகமகரிஷி பக்தியோடு மஹோத்ஸவங்கள் நடத்தினார். தேவியும் எல்லோருக்கும் அனைத்துச் செல்வங்களை அளித்து பூசைகளை ஏற்று அவ்விடத்திலேயே தங்கி விட்டார்.

(மாத்ருஸ்ரீ தரிகொண்ட வேங்கமாம்பா இயற்றிய ‘ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்’ என்ற காவியத்தைத் தழுவி இந்த நூல் எழுதப்பட்டது.)